செம்மண்

நிலம் 3 துகள் 125 வள்ளுவர் ஆண்டு 2052, 10 - 16 மார்கழி 2022 வாரமலர் பக்கங்கள் 32

ரூ. 40 கோடி பெறுமதிக்கு சிக்கியது கடத்தல் தங்கம்

இந்தியப் புலனாய்வாளர்களின் தகவலால் நடவடிக்கை

இலங்கைக்குள் கடத்திக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்பட்ட ரூ. 40 கோடி பெறுமதியான தங்கம் கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலைய சுங்க அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை கைப்பற்றப் பட்டது. இந்தியப் புலனாய்வு அதிகாரிகள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவை கைப்பற் றப்பட்டன. தங்கத்தைக் கடத்தி வர முற்பட்டவர்கள் என்கிற சந் தேகத்தில் நால்வர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 22 கிலோ நிறையுடைய தங்கம் பறி முதல்

பக்கம் 03

'மண்டாஸ்' கடும் குளிரால் 500 கால்நடைகள் இறப்பு

வடக்கில் பரிதாபம்

யாழ்ப்பாணத்திற்கு நெருக்கமாக இந்து மா கடலில் ஏற்பட்ட காற்றழுத்தத் தாழ்வு நிலையால் உருவான 'மண்டாஸ்' சூறா வளி ஏற்படுத்திய கடும் குளிர் காரணமாக வடக்கில் 500 கால்நடைகள் உயிரிழந்துள் ளன என்று இலங்கை கால்நடை வளர்ப் பாளர்கள் சம்மேளனம் தெரிவித்தது.

'மண்டாஸ்' சூறாவளி வெள்ளிக்கிழமை வலுவிழந்து புயலாக மாறிய நிலையில் தமிழகக் கரையோரம் இரவு கடந்தது. இந்தச் சூறாவளியினால் வடக்கு மாகாணத் தில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை களில் கடும் குளிர் நிலவியது. பலத்த காற் றுடன் கூடிய மழைப் பொழிவும் இருந்தது. இந்தக் காலநிலை

பக்கம் 03

சாணக்கியன் எம்.பிக்கு எதிராக சீன தூதரம் முன் ஆர்ப்பாட்டம்

"சீனா கோ கம" போராட்டத்தை முன்னெடுக்கவேண்டி வரும் என்று நாடாளுமன்றத்தில் எச்சரித்த மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜமா ணிக்கம் சாணக்கியனுக்கு

பக்கம் 03

மண்டாஸ் ஏற்படுத்திய கடும் காற்றால் வடக்கு கிழக்கில் 500 வீடுகள் சேதம்

'மண்டாஸ்' சூறாவளி ஏற்படுத்திய கடும் காற்று மற்றும் மழை காரணமாக வடக்கு கிழக்கில் 510 வீடுகள் பகுதியளவில் சேத மடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலை யம் தெரிவித்தது. நாடு முழுவதும் 2,7-00 வீடுகள் சேதமடைந் துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திரு-கோணமலை, அம் பாறை மாவட்டங்களில் 241 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. 245 குடும்பங்களைச் சேர்ந்த 883 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் 269 வீடுகள் சேதமடைந்துள்ளன. 484 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 659 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டையில் 6 வீடுகள் சேதமானதுடன் 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் 535 வீடுகள் சேதமடைந்துள்ளன. 538 குடும்பங்களைச் சேர் ந்த 2115 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பதுளை, மொனராகலை ஆகிய இடங்களிலேயே அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கு ஆயிரத்து 473 வீடுகள் சேதமடைந்

பக்கம் 02

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

தேவை தீர்வு மட்டுமே பொறிமுறைகளல்ல

தமிழர் பிரச்சினைக்கான தீர்வை எட்டும் நோக்குடன் அரசியல் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கும் என்கிற நிலையை அடுத்து, அதில் தமது பங்கு நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதன் மூலம் வாக்கு வங்கிகளைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கும் வழக்கமான பல்லவியை தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் தொடங்கியிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைபின் இன்நாள் மற்றும் முன்னாள் கட்சிகள் எல்லாம் அண்மையில் இராஜவரோதயம் சம்பந்தனின் உத்தியோகபூர்வ வீட்டில்கூடி இணைப்பாட்சியை (சமஷ்டி) அடிப்படையாகக் கொண்ட தீர்வு ஒன்றை நோக்கியே பேச்சுக்களை நகர்த்துவது என்று முடிவு செய்திருந்தன. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியனவும் வடக்கு மாகாண சபை முன்னாள் முதல்வர் விக்கேனஸ்வரனின் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியும் ஈபிஆர்எல்எவ் கட்சியும் இந்த இணக்கத்தை எட்டியிருந்தன.

இந்த இணக்கத்திற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸையும் உள்ளீர்த்துக்கொள்ள முயற்சிக்கப்பட்டபோதும் தங்களை முதலிலேயே பேச்சுக்கு அழைக்கவில்லை என்பதைக் காரணம் காட்டி விலகிக்கொண்டது அந்தக் கட்சி. அத்துடன் மாவட்ட சபைகளையே தீர்வாக ரணில் தமிழர்களின் தலையில் கட்டியடிக்கப் போகிறார் என்றும் அதற்குத்தான் விழுந்தடித்துக்கொண்டு கூட்டமைப்பினர் அவருடன் பேசுவதற்கு ஓடிப் போகிறார்கள் என்றும் வசை பாடியிருந்தார் அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

கஜேந்திரகுமாருக்கும் கூட்டமைப்புக்குமான பிரச்சினை ஒன்றும் புதிதில்லை என்றாலும் கூட்டமைப்புக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதும் தமிழ்த் தேசியத்தின் பெயரால் கடும் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதுமே காங்கிரஸின் அரசியல் என்பதாலும் அந்த நிலைப்பாடு குறித்து ஆச்சரியப்பட ஏதுமில்லை. இருப்பினும் தமிழர்கள் பிரச்சினைக்கான தீர்வு என்று வருகின்றபோது தலைவர்கள் தமது கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று இந்த விடயத்தை புத்திசாதுரியமாகக் கையாளப் போவதில்லை என்பது அந்தத் தருணத்தில் மீண்டும் ஒரு தடவை வெளிப்பட்டது. தற்போது பேச்சுத் தொடங்குவதற்கு முன்பாகவே அது எத்தகைய கட்டமைப்புடன் நடக்கவேண்டும் என்பது தொடர்பில் ரெலொ அவசரமாக ஒரு வெள்ளையறிக்கையை விட்டுள்ளது. இந்தியாவின் மேற்பார்வை, ஐநாவின் பிரதிநித்துவம், பன்னாட்டுப் பிரதிநிதிகளின் பங்களிப்பு, புலம்பெயர் உறவுகளின் ஒருங்கிணைப்பு என்றெல்லாம் பேச்சுக்கான பொறிமுறை ஒன்று குறித்து அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போவானாம் என்கிற கதையாக பேச்சைத் தொடங்குவதற்கான வழிவகையையே ஏற்படுத்த முடியாத நிலையிலும் நிபந்தனைகள், பொறிமுறைகள் குறித்தெல்லாம் பொதுவெளியில் கருத்துக்களைப் பகிர்வதன் நோக்கம் தமிழ் மக்கள் மத்தியில் தத்தமது வாக்குக்கான அறுவடையை அதிகரிக்கும் உத்தியாகத்தான் படுகின்றது. தமிழ்த் தலைவர்கள் நிபந்தனைகளையோ பொறிமுறைகளையோ விதித்து அவற்றை ஏற்றுக்கொள்ளும் நிலையில் சிங்களம் இல்லை என்பது தெட்டத்தெளிவு. அப்படி சிங்களம் ஏற்றுக்கொள்ளாத நிலையில் தீர்வை எட்டுவதற்கான மாற்று ஏற்பாடு ஏதும் தமிழ்த் தலைவர்களிடம் இல்லை என்பதும் தெட்டத்தெளிவு. பின்னர் எதற்காக இந்த வீண் நாடகம்? எந்த வழியிலாவது தமிழ்த் தலைவர்கள் தீர்வைப் பெற்றுத் தந்தால் தமிழர்கள் மத்தியில் அவர்களின் மதிப்பு உயரும். தீர்வை அடையாமல், அதற்கு வழியேயில்லாம் பொறிமுறைகளை மக்களுக்குச் சொல்வதால் எந்தப் பயனும் இல்லை.

தீர்வை அடையும் வரைக்குமாவது தமிழ்த் தலைவர்கள் தங்கள் கட்சி அரசியலை ஓர் ஓரமாக வைத்துவிட்டுப் பரந்தமனதுடன் செயற்பட்டால் ஏதாவது கொஞ்சமாவது கிட்டக்கூடும். சிந்திப்பார்களாக.

'கோட்டா கோ கம' தாக்குதல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றது உயர் நீதிமன்றம்

முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவைப் பதவியிலிருந்து ஓடவைத்த காலி முகத்திடல் 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட 5 மனுக்களையும் விசாரணைக்கு ஏற்க முடியுமா என்பது தொடர்பில் வெள்ளிக்கிழமை பரிசீலித்த உயர் நீதிமன்றம் அவற்றின் மீது விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்தது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி காலி முகத்திடல் 'கோட்டா கோ கம' போராட்டத் களத்தின் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கூறி லஹிரு சானக்க உள்ளிட்ட 05 சமூக செயற்பாட்டாளர்கள் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுக்கள் உயர் நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல் கொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் வெள்ளிக்கிழமை பரிசீலிக்கப்பட்டது. மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, சனத் நிஷாந்த, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க, மேல் மாகாண மூத்த பிரதிக் காவல் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரை அடுத்த ஆண்டு ஆனி 22 ஆம் நாள் நீதிமன்றில் முற்படுமாறு உயர் நீதிமன்றம் அறிவித்தலும் பிறப்பித்தது.

அமைதிப் போராட்டங்கள் மீதான தாக்குதல்களை தடுக்க உத்தரவு பிறப்பிக்கவும், அது தொடர்பிலான வழிகாட்டுதல்களை தயாரிக்கவும் காவல் மா அதிபருக்கு கட்டளை இடுமாறும் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் ஊடாகக் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த மனுவில் தரைப்படையின் முன்னாள் தளபதி சவேந்திர சில்வா பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவருக்கு எதிராக விசாரணைகளை நடத்த எதிர்பார்க்கவில்லை என மனுதாரர்கள் சார்பிலான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.இதையடுத்து வழக்கு நடவடிக்கைகளில் இருந்து அவரை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

'கோட்டா கோ கம' போராட்டங்களைத் தொடர்ந்து பதவி விலகும் நிலை முன்னாள் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு ஏற்பட்டபோது- அவருக்கு ஆதரவு தெரிவித்து அலரி மாளிகைக்கு வந்த அவரது ஆதரவாளர்கள் அவருடனான சந்திப்பின் பின்னர் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அவர்களைத் தடுத்து நிறுத்தாமல் காவல்துறையினர் கணிசமான நேரம் வேடிக்கை பார்த்தனர்.

மண்டாஸ் ஏற்...

துள்ளன. 1524 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 945 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல இடங்களிலும் மரங்கள் முறிந்தும் பாறியும் வீழ்ந்திருந்தன. எனினும் உயிரிழப்புக்கள் எவையும் பதிவாகவில்லை.

வருமான வரி திருத்தத்தை எதிர்த்து தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

வருமான வரி திருத்தச் சட்டமூலத் திற்கு எதிராகத் தொழிற்சங்கப் பிர திநிதிகள் வெள்ளிக்கிழமை போராட் டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அருகில் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங் கள் கலந்துகொண்டன.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், அரச பல் வைத்தியர்கள் சங்கம், பல் கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம், மருத்தவ பீட ஆசிரியர்கள் சங் கம்,இலங்கை மின்சார பொறியிய லாளர்கள் சங்கம் ஆகியவை அவற் றில் சில.

நாடாளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அருகில் வீதியோரத்தில் திரண்ட தொழிற்சங்கவாதிகள் அரசு முன் மொழிந்துள்ள வரிச் சீர்திருத்தச் சட் டத்திற்கு எதிரான வசனங்கள் எழு தப்பட்ட பதாதைகளைத் தாங்கியி ருந்தனர்.

நாங்கள் வரி அறவிடவேண்டாம் என்று சொல்லவில்லை, அதனை நியாய மான முறையில் அறவிடுங்கள் என்று தான் கோருகின்றோம் என்றார் ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினரான வைத் தியர் வாசன் இரத்தினசிங்கம்.

வருமான வரி வசூலிப்பு சட்டத்தில் வைத்தியர்கள் உள்ளிட்ட முக்கிய தொழிலில் ஈடுபடுவோருக்கு பாதிப் பான வகையிலேயே திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. மாதத் திற்கு ஒரு இலட்சத்திற்கும் அதிக மான வருமானத்தை பெறுபவர்க ளுக்கு வரிகள் அறவிடப்படவுள்ளன. இதனூடாக விசேட வைத்தியர் ஒரு வர் வருடத்திற்கு இரண்டு முதல் இரண்டரை மாத சம்பளத்தை வரி யாக செலுத்தும் நிலைமை ஏற்படு கின்றது.

பண வீக்கம் அதிகரித்து, வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத் தில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறு வரி திருத்தங் களை மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார் அவர்.

சாணக்கியன்...

எதிர்ப்புத் தெரிவித்தும் சீனாவுக்கு ஆதரவாகவும் வெள்ளிக் கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சீனத் தூதரகத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் டசின் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். சில புத்த பிக்கு களும் அவர்களில் இடம்பிடித்திருந்தனர். தனிச் சிங்களத்தில் எழுதப்பட்ட சுலோகங்க அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப் பாட்டக்காரர்கள் நடைபாதையில் சிறிது நேரம் நின்றிருந்த பின்னர் கலைந்து சென்றனர்.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சாணக்கியன், தான் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் கொழும் பிலுள்ள சீனத் தூதரகம் தனது கீச்சக (ருவிற்றர்) கணக்கு மூலம் தன்னை விமர்சித்தது தொடர்பில் கேள்வி எழுப்பினார். சீனத் தூதரகத்தின் செயற்பாடு இலங்கையின் இறைமையை மீறும் செயல் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சீனா உடன டியாகப் பதிலளிக்காவிட்டால் "சீனா கோ கம" பரப்புரையைத் தான் முன்னெடுக்க வேண்டி வரும் என்றும் அவர் எச்சரித் திருந்தார். கடன் மறுசீரமைப்பில் சீனா காட்டும் தாமதம் இலங் கைக்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன் கிடைப்பதைத் தாமதப்படுத்துகின்றது என்றும் அவர்- சுட்டிக்காட்டியிருந்தார். அவரது "சீனா கோ கம" போராட்டம் குறித்த எச்சரிக்கைக்கு எதிராகவே வெள்ளிக்கிழமை போராட்டக்காரர்கள் குழுமியிருந் தனர். இந்த விடயத்தில் சீனாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகை யிலேயே போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தனக்கெதிரான போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த சாணக்கியன், "எனக்கெதிராக முதல் தடவையாக ஒரு போராட் டம் அதுவும் கொழும்பில் நடத்தப்பட்டிருப்பது குறித்து நான் பெரிதும் ஆர்வமடைந்திருக்கின்றேன். அதிலும் பலம் வாய்ந்த நாடு ஒன்றின் ஒன்றின் தூதரகத்திற்கு வெளியே இது நடத் தப்பட்டிருப்பது கவனித்துக்குரியது" என்றார்.

மண்டாஸ்...

காரணமாக வடக்கில் உள்ள மாவட்டங்களில் பரவலாக கால்நடைகள் உயிரிழந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட் டத்தில் மட்டும் **163** பசுக்களும் **3** ஆடுகளும் உயிரிழந்திருக்கின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாகாணம் முழுவதும் சுமார் **500** வரையான கால்நடைகள் உயிரிழந்திருக்கின்றன என்று சம்மேளம் தெரிவித்தது. கடும் குளிரைப் போக்க விவசாயிகள் தீமூட்டி வெப்பத்தை ஏற்படுத்த முயன்றபோதும் கால்நடைகள் பலவற்றின் உயி ரிழப்புக்களைத் தவிர்க்க முடியவில்லை என் றும் அவர்கள் தெரிவித்தனர்.

ரூ. 40 கோடி...

செய்யப்பட்டதாக கட்டுநாயக்கா வானூர்தி நிலைய சுங்கப் பேச்சாளர் சுதந்த சில்வா தெரிவித்தார். காப்புகள், சங்கிலிகள் உள்ளிட்ட தங்க ஆபர ணங்களும் தங்கத் துகள்களும் பறிமுதல் செய் யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களின் பயணப் பொதிக ளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கத் துகள்களும் நகைகளும் கண்டுபிடிக்கப்பட்டது டன் சந்தேகநபர்கள் அணிந்திருந்த அளவுக்கதி கமான நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைது- செய்யப்பட்ட சந்தேகநபர்களில் மூவர் துபாயிலிருந்து சென்னையூடாகக் கொழும்புக்கு வந்தவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். அண்மைக் காலத்தில் சிக்கிய மிகப் பெரிய தொகைக் கடத்தல் தங்கம் இதுவெனவும் அவர்கள் கூறி னர்.

"நோ கேத்தா நோ சினோ"

சாருலதா

இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு மாத்திரமல்லாமல் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரும் ஒரே நபர் ரணில் விக்கிரமசிங்க. நாடாளுமன்றில் எவ்வளவு நெருக்கடியான சூழல் ஏற்பட்டாலும் "மிஸ்ரர் பீன்"போல நகைச்சுவையாக ஓரிரு வார்த்தைகளில் வேகமாகப் பதிலளித்துச் சமாளிக்கும் ஆற்றல் அவருக்குண்டு. 2020 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் ஆசனத்தைக்கூடப் பெறாமல் படுதோல்வியடைந்த நிலையில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையால் ஓர் ஆசனம் அந்தக் கட்சிக்கு வழங்கப்பட்டது. அவமானம் காரணமாக ஒரு வருடம் வரை அந்தக் கட்சி சார்பில் யாரும் நாடாளுமன்றத்துக்குச் செல்லவில்லை. இறுதியில் கட்சித் தலைவர் ரணில் நாடாளுமன்றத்துக்குச் சென்ற போது பலரும் கேலி செய்தார்கள். அந்த அவமானங்களையும் சகித்துக்கொண்ட ரணில்தான் இப்போது அரச தலைவர்...!

ராஜபக்சாக்களுக்கு எதிரான போராட்டம்

2022 நடுப்பகுதியில் ஏற்பட்ட பெரியளவான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்த்து எதிர்க் கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பௌத்த பிக்குகள், கலைஞர்கள், மக்கள் எனப் பல தரப்பினரும் காலி முகத்திடலில் ஒன்றுகூடிப் போராடினார்கள். இந்தச் சூழலில் ராஜபக்சாக்களுக்கு இருந்த ஒரே தீர்வு போராட்டக்காரர்களின் கைகளில் நாட்டின் நிர்வாகம் போய் விடக்கூடாது என்பதாகவே இருந்தது. அதை ரணிலிடம் கொடுத்தால் தமது குடும்பமும் கட்சியும் தப்பி விட வாய்ப்புண்டு என அவர்கள் எடுத்த முடிவு ரணிலைப் தலைமை அமைச்சராக்கியது.

அதை வைத்து அடுத்த நகர்வை மேற்கொண்ட ரணில் கோட்டாவை நாட்டை விட்டுக் கலைத்துப் படையினரைப் பலப்படுத்தித் தானே அரச தலைவராகினார். இத்தகைய ராஜதந்திரக் காய் நகர்த்தலை ரணிலைத் தவிர வேறு எவராலும் செய்திருக்க முடியாது.

ரணில் முகம் கொடுக்கும் பிரச்சினைகள்

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருதலைக் கொள்ளியுள் எறும்பாகவோ மத்தளத்துக்கு இரண்டு

பக்கங்களிலும் அடி விழும் பாணியி லேயோ அல்லாமல் பல் பக்க நெருக்கடி களுக்கு முகம் கொடுத்து வருகிறார். பொரு ளாதாரப் பிரச்சினை, எதிர்க் கட்சிகளின் எதிர்ப்புகள், தமிழருக்கான அரசியல் தீர்வு, முஸ்லிம்களை அரவணைப்பது (சிறு பான்மை மக்களின் வாக்குகளைப் பெறு வதற்காக) ராஜபக்சாக்களைச் சமாளிப்பது, இந்திய-சீன அணுகுமுறைகள், வெளி நாட்டுத தூதர்களைக் கையாள்வது, ஐ.நா. மனித உரிமை - உள்ளூர் மனித உரிமை அமைப்புகளுக்குப் பதிலளிப்பது, பௌத்த பீடங்களைக் கையாள்வது, முப்படைகளைக் கையாள்வது என்று மிக அதிகமான பிரச்சி னைகளுக்கு முகம்கொடுத்து வருகிறார் ரணில். தமி ழரைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு பெறுவது மட் டுமே பிரச்சினை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை வடக்கையும் கிழக்கையும் இணைக்க விடக்கூடாது என்பதே பிரச்சினை. இவ்வாறு ஒவ்வொருவரும் தனித் தனியாக ரணிலை அணுகுவதால் அத்தனை தரப்புக்கும் கதை சொல்லிச் சமாளிக்க வேண்டியவராக இருக்கிறார் ரணில்.

தமிழரைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு பெறுவது மட்டுமே பிரச்சினை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை வடக்கையும் கிழக்கையும் இணைக்க விடக்கூடாது என்பதே பிரச்சினை.

அந்த ஆற்றல் அவரிடம் நிறையவே உண்டு. உணர் ச்சி வசப்பட்டுக் கத்துவதோ தரவுகள் இல்லாது கதைக் கும் பழக்கமோ அவரிடம் இல்லை. நல்லாட்சிக் காலத் தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய உதவிகள் எனப் பலவற்றையும் இரகசியமாக வைத்திருப் பதால் யாரும் ரணிலுடன் முட்டி மோத முடியாத நிலையே காணப்படுகிறது.

நாடாளுமன்றத்தை நீடிப்பது

பல்வேறு தரப்பினருக்கும் ரணில் முக்கிய அச்சாணி யாகிவிட்டதால் அவரை அணுசரித்துப் போகவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. ரணிலின் அரசைக் கவிழ்ப் பதற்கு நான் ஒருபோதும் துணைபோக மாட்டேன் என்று நாடளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் இப்போது அறிவித்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் கால அவகாசம் தேவைப்படுவதால் ரணில் கூறு வதைக் கேட்க வேண்டிய நிலையில் தற்போது நாடாளுமன்றில் பெரும்பாலானவர்கள் உள்ளனர். இவற்றை நன்கு விளங்கிய வகையிலேயே பொரு ளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை தேர் தல் இல்லை என்று ரணில் திட்டவட்டமாகக் கூறி யுள்ளார். இவ்வாறனதொரு நிலைப்பாட்டை "நோ கதா நோ சினா" என்று சிங்களத்தில் சொல்வார்கள். கதையும் இல்லை சிரிப்பும் இல்லை என்பதே இதன் அர்த்தம். அந்தச் சூழலை ரணில் தற்போது ஏற்படுத் தியுள்ளார்.

தற்போதுள்ள நாடாளுமன்றத்தைத் தேர்தல் வைத் துக் குழப்பாமல் மேலும் ஒரு நாடாளுமன்றக் காலப் பகுதி வரை (5ஆண்டுகள்) நீடிப்பது, அதன் பின்னர் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயே 3இல் 2 பெரும்பான்மை வாக்குகளுடன் தன்னை அரச தலைவர் ஆக்குவது என்ற ரணிலின் மூலோபாயத்துக்குப் பெரும் பாலானவர்கள் உட்பட்டே ஆகவேண் டும். தற்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் சிங்கள, தமிழ் வயோதிபர்கள் இனிவரும் காலங்களில் தேர்தலில் போட்டியிட்டு வெல்ல வாய்ப்பில்லை என்பதும் மகிந்த தரப்பில் பலர் வெல்லப்போவதில்லை என்பதும் சஜித் தரப்பிலும் அவ்வாறில்லை என்பதும் கூட்டமைப்பு, தமிழ் அரசுக் கட்சியினருக்குத் தற் போதுள்ள ஆசனங்களும் கிடைக்காது என்பதும் தெரிந் திருப்பதால் நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை வைப்போம் என்ற விசப் பரீட்சையில் யாரும் இறங்கப் போவதில்லை. ரணிலுக்கும் இது நன்கு தெரியும்.

தனது மூளைப்பலத்தாலும் ராஜதந்திர நகர்வுகளாலும் இரகசியத்தைப் பேணும் தன்மையாலும் எல்லாவற்றையும் வெல்லும் ஆற்றல் ரணிலுக்கு உண்டு. அதுவரை தற்போதுள்ள பிரச்சினைகள் மேலும் அதிகரித்தாலும் ரணில் கலங்கப்போவதில்லை.. எதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்போவதும் இல்லை. ரணிலுக்கு எதி ரான எந்த வேலைத்திட்டங்களும் பலமாக இல்லை. பலம்பெற நினைத்தால் அவற்றைக் கிள்ளி எறியும் நுட்பமும் ரணிலுக்குத் தெரியும். அந்த அடிப்படை யிலேயே புதிதாகப் பலருக்கு அமைச் சுப் பதவிகளை வழங்கவும் திட்டமிட்டிருக்கிறார். ரணி லின் நகர்வுகள் சட்ட பூர்வமானதாகவும் புத்தி பூர்வமானதாகவும் இருப்பதால் அவரது வலைக்குள் பலர் சிக்குவர். தனது இலக்கை அடையும் வரை ரணிலுக்கு எதிர்ப்புகள் இல் லைப்போலதான் தெரிகிறது.



"கியூ ஜம்பேர்ஸ்"

மருதநாயகம்

யாழ்ப்பாணத்துத் தமிழர்களுக்கு வரிசைக் குழப்பிகள் என்று ஆங்கிலேயர்கள் பெயரிட்டிருக்கிறார்கள் என்று ஆங்கில தேசத்தில் வாழும் எனது நண்பர் ஒருவர் சொன்னார். "கியூ ஜம்பேர்ஸ்" என்கிற தலைப்பில் ஊடக விவாதம் ஒன்று நடந்தது என்றும் சொன்னார். ஆங்கிலத் தேசங்களில் வாழும் தமிழர்கள் படிப்பறிவு இல்லாதவர்களோ, சட்டம் நடைமுறைகள் புரியாதவர்களோ அல்லர். கியூ ஜம்பேர்ஸ் என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் இருக்கிறபோதிலும் அதற்குச் செயல்வடிவம் கொடுத்த பெருமை யாழ்ப்பாணத் தமிழருக்கே உண்டு.

ஆங்கிலேயர்கள் சொல்வதற்கு ஒப்பான விடயம் ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்தது. யாழ்ப்பாணம் தியாகிகள் அறக்கொடை நிலைய உரிமையாளர் தியாகேஸ்வரனின் 70 ஆவது பிறந்தநாளன்று மக்களுக்கு உதவிப் பொருள்கள், நிவாரணப்பொருள்கள் வழங்கப் பட்டபோது இந்த வரிசைக் குழப்பம் ஏற்பட்டு அது சமூக வலைத்தளங்களில் விவாதப்பொருளாக மாறியது.

தியாகிகள் அறக்கொடை நிலைய உரிமையாளர் அவ்வப்போது மக்களுக்கு உதவிகளை வழங்குவது வழமை. பொருள் தட்டுப்பாடு நிலவுகிற காலங்களில் அவர் அவ்வாறு வழங்கியுள்ளார். இந்தமுறை அவருடைய பிறந்த தினத்தையொட்டி அவரது வணிக நிலையம் மூடப்பட்டிருக்கும் என்கிற அறிவித்தலை முற்கூட்டியே வணிக நிலையத்துக்கு முன்பாகக் காட்சிப்படுத்தியிருந்தனர். அதையொட்டித் தமக்கு ஏதாவது பொருள்கள் வழங்கப்படலாம் என்று முன்னுணர்ந்தவர்கள் அங்கு குவிந்தனர். தற்போது ஏழ்மைப்பட்ட மக்களிடம்கூடச் சிறியதும் பெரியதுமான கைபேசிகள் கைகளில் தவழ்வதால் முதலில் அந்த இடத்துக்குச் சென்றவர்கள் தமது உறவுக்காரர், நண்பர்கள் எனப் பலரையும் கூவி அழைத்தனர். செய்தி வேகமாகப் பரவியது. அதிக மக்கள் அங்கு வந்து சேர்ந்தனர். சிலர் அதிகாலை 4 மணியிலிருந்து அங்கு காத்திருந்தனர் என்றும் கூறப்படுகிறது. இதனால்

தமிழ் மக்களிடம் காணப்படுகிற மிகப் பெரிய குறைபாடு போதனையில்லாத மக்களாக இருப்பது.

அந்த நிறுவனம் மிகச் சாதாரணமாக மேற் கொள்ள விருந்த பிறந்த நாளை யார் யாரோவெல்லாம் சேர்ந்து ஊதிப் பெருக்க வைத்தனர். இதனால் சனநெரிசல் உண்டாகிக் குழப்பமான நிலை ஏற்பட்டது. வரிசைக் குழப்பங்கள் ஏற்பட்டன.

பேருந்தில் ஏற முண்டியடிக்கும் பழக்கம்

பஸ்ஸில் ஏறுவதற்காக நம்மவர்களில் 15 பேர் காத்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், அவ்விடத்தில் சனமே இல்லாமல் வெறும் பஸ் வந்தால்கூட (60 பேர் வரை இருக்கக்கூடிய ஆசன வசதிகள் இருக்கும்) இரண்டு வாசல்களாலும் முண்டியடித்து ஏறுவதும், ஜன்னல் வழியாகத் தமது பைகளை எறிந்து இடம் பிடிப்பதும் உள்ளே ஏறியவர்கள் கைக்குட்டைகளை ஆசனங்களில் போட்டு இன்னொருவருக்கு இருக்கை பிடிப்பதும் தமிழ் மக்களிடமுள்ள இயல்பான தன்மையாகும். இவ்வாறு செய்பவர்களில் பெரும்பாலானவர்கள் படித்தவர்களாகவும் வயது முதிர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். அந்த வகையில் பார்த்தால் இந்த ஒழுங்கின்மையைத் தற்போதுள்ள சந்ததிக்குக் கொடுத்தவர்கள் மூத்தோரோ.

போதனை இல்லாத மக்கள்

தமிழ் மக்களிடம் காணப்படுகிற மிகப் பெரிய குறைபாடு போதனையில்லாத மக்களாக இருப்பது. போராட்டம் நடந்த காலத்தில்கூட புலிகளுக்கும் கதை சொல்லி இலங்கைப் படையினருக்கும் கதைவிட்டுத் தங்களது அலுவல்களைப் பார்த்துச் சென்ற அனுபவமும் எந்த விடயத்திலும் கூச்சமில்லாமல் பொய் சொல்லும் ஆற்றலும் உள்ளவர்கள் தமிழர்கள். படித்த உயரதிகாரிகள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள்,

சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் எனப் பல தரப்பினரிலும் இதை மிகச் சாதாரமாகக் காணமுடியும். இதற்குக் காரணம் தமிழர்கள் வழிப்படுத்தப்படாத மக்களாக இருப்பதாகும்.

தற்போதுள்ள சூழலில் 50 பேரை வைத்துக் கூட்டம் நடத்தினால்கூட ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போதே கேள்வி கேட்டுக் குழப்பி அந்தக் கூட்டத்தின் நோக்கத்தையே சின்னாபின்னமாக்கி விடுகின்றனர். ஆங்கிலத்தில் "டயலொக்" என்ற சொல்லின் அர்த்தம் செவிமடுப்பதும் உரையாடுவதும் என்பதாகும் அல்லது கலந்துரையாடுவது என்பது. இந்தப் பழக்கம் தமிழரிடம் இல்லை. செவிமடுப்பது என்ற விடயத்தில் இங்கிதம் இல்லாமலே நடந்து கொள்வர். பிறர் சொல்வதைச் செவிமடுக்காமல் தாங்கள் மாத்திரம் சொல்வதைக் கேட்கவேண்டும் என நினைக்கின்றனர்.

பயிற்சியா? பரவணியா?

மன்னன் ஒருவன் தான் இரவில் உணவுண்ணும்போது மெழுகுவர்த்தி ஒன்றை ஏற்றித் தனது பூனையின் தலையில் வைத்துவிட்டுச் சாப்பிடுவது வழக்கம். அந்தளவுக்கு அந்தப்பூனை அசையாதிருக்குமாறு பயிற்றுவிக்கப் பட்டிருந்தது. அந்தப் பூனையின் பயிற்சியை உதாரணமாகக் காட்டிப் பயிற்சியால் எதையும் சாதிக்க முடியும் என்று தனது மந்திரிக்குக் கூறினார். அதைக் கேட்ட மந்திரி பயிற்சியை விட பரவணிதான் பெரிது என்று வாதாடினார். அதை நிரூபித்துக் காட்டுவதாகவும் சவால் விட்டார். மறுநாள் மன்னர் வழமைபோல பூனையின் தலையில் மெழுவர்த்தியை ஏற்றி வைத்துவிட்டு சாப்பிட்டுக்கொண்டிருந்தார். சுட்ட கருவாட்டுத் துண்டுடன் அங்கு வந்த மந்திரி பூனைக்குத் தெரியும் வண்ணம் அதை ஆட்டிக் காட்டப் பூனை தலையிலிருந்த மெழுகுவர்த்தியை மறந்து கருவாட்டை நோக்கிப் பாய்ந்தது. உடனே மந்திரி கூறினார் மன்னா எத்தனை பயிற்சி கொடுத்தாலும் பரவணிதான் பெரிது என்பதைப் பார்த்தீர்களா? என்று.

பணம் கொடுத்து வாங்கவே வரிசை குழப்புபவர்கள்

பொதுவாகப் பணம் கொடுத்து வாங்கும் ஒரு பொருளுக்கே அடிபடுகின்ற மக்கள் இலவசமானால் அதிகம் முண்டியடிப்பது வழமையே. பொருள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடுகளின்போது வரிசைகளில் நிகழ்ந்த முறைகேடுகள் ஏராளம். பிரதேசசெயலர்கள், கிராம சேவகர்கள் ஊடாகப் இத்தகைய பொருள்களை வழங்கமுடியும் என்று சிலர் கூறுகின்றனர். அது நடைமுறை சாத்தியம் இல்லாதது. அவ்வாறு தனிநபர்களின் நிகழவுகளை அரச அதிகாரிகள் செய்ய முயன்றால் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை விட்டுவிட்டு பிறந்த நாள் கொண்டாட்டங்களில் யார் யாரோவினுடைய அன்பளிப்புகளைப் பரிமாறும் நபர்களாக மாறிவிட வாய்ப்புண்டு. எனவே வரிசை குழப்பும் தமிழர்களின் பண்பை இயல்பிலிருந்து திருத்தியமைக்கவேண்டும். பயிற்சியால் பழக்கதோசத்தைத் திருத்த முடியாது.

கைதிகளைச் சாகாவிடாது தடுப்பதில் அக்கறை

86

அப்பன், ஜெயபாலன் ஆகியோர் விநாயகமூர்த்தியை நம்பித் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டார்களே தவிர அவர்களின் விடுதலைக்கு அவர் எதுவும் செய்யவில்லை. நான் விடுதலையானபோது (22.07.2002) களுத் துறைச் சிறைச்சாலையில் 'பி6' வார்ட்டில் அவர்கள் சிறைவைக்கப்பட்டிருந்தார்கள். சட்டத்தரணி விநாயகமூர்த்தி கொடுத்த வாக்குறுதிகள் பல நிறைவேறாது போயிருக்கலாம். பல விடயங்கள் அவரது கையில் மட்டும் தங்கியிருப்பதில்லை. எனினும் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போதெல்லாம் கைதிகள் இறந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தோடு எப்படியாவது யாரையாவது அழைத்துவந்து அவற்றை நிறுத்தியவர் என்ற பெருமை அவருக்குண்டு.

கைதிகளைப் பொறுத்தவரை சிறைச்சாலைக் கூரையில் ஏறுவது என்பது ஒரு நிச்சயிக்கப்பட்ட சாவு. அதையும் மீறித் தமிழர் விடுதலைக்காக எதையும் செய்ய முன்வருவதற்கான காரணம் சிறை வாழ்வில் ஏற்பட்ட விரக்தியும், அரசினதும் நீதித் துறையினதும் பாரமுகமான செயற்பாட்டால் அடைந்த ஆத்தி ரமுமேயாகும்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை தமிழ்க் கைதிகள் என்போர் தனி இன மாக நடத்தப்பட்டார்கள். ஆனால் மலையகத்தைச் சேர்ந்த சில கைதிகளின் விடு தலைக்கு மலையக நாடாளு உறுப்பினர்கள், அமைச்சர்களின் தலையீட்டால் அழுத்தம் கொடுக்கப்பட்டது. அவ்வாறு சிலர் விடுவிக்கப்பட்டுமுள்ளனர். மலை யகக் கைதிகள் வடக்குக் கிழக்கு இளைஞர்களுடன் இணைந்து செயற்படுவதைத் தடுக்கும் முயற்சியாகக்கூட அவர்களின் விடுதலை விடயம் கருத்தில் கொள்ளப் பட்டிருக்கலாம்.

15.07.2002 அன்று தினக்குரல் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. 19.07. 2002இல் களுத்துறைச் சிறைக் கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட் டத்தைத் தொடங்கவிருக்கிறார்கள் என்பதே அந்தச் செய்தி. ஆனால் சிறைக் குள் அனைவரும் கலந்து கதைத்து எந்த ஒரு முடிவும் எடுக்கவில்லை. பின்னர் தான் அறிந்தேன் 'டி' பிரிவில் 25 பேர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங் குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று. 'பி' பிரிவில் யாரும் போராட்டத்தில் ஈடுபடவிருப்பத்தாகத் தெரியவில்லை. நிலமை மோசமானால் பார்ப்போம்

நாய்களைப் பயன்படுத்தி நாட்டைப் பாதுகாத்தேன்

சாமர குமார என்பவர் கொமாண்டோ அணியைச் சேர்ந்த படைச் சிப்பாய். போரை நடத்துவதற்கு உதவும் நோக்கில் படைத்தரப்புக்கு முக்கிய தடயங்களைத் தேடிக்கொடுத்த நாய்களின் பயிற்றுவிப்பாளர் இவர். தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட நாய்கள் பொறுப்புள்ள படைச் சிப்பாய்போல களத்தில் செயற்பட்ட அனுபவங்களை வனச யூரியூப் தளத்தினூடகக் கீழ்வருமாறு பகிர்ந்தார்.

மொழியாக்கம்
கமலநாதன்

எனது சொந்த ஊர் யால. பாடசாலைப் படிப்பை முடித்தபின் 1998 மார்கழி 18ஆம் திகதி படையில் சேர்ந்தேன். தொடக்கப் பயிற்சியை இங்குரான படைப் பயிற்சி முகாமில் பெற்றேன். அதன் பின் கொமாண்டோ அணியில் சேர்ந்து 4 வேறுபட்ட கொமாண்டோப் பயிற்சிகளை முடித்தேன். இதற்காக 2 வருடங்களைச் செலவிடவேண்டியிருந்தது.

பயிற்சிகளின்போது பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் திறமைகளையும் போர்க் களத்தில் காட்டவேண்டும் என்பதே கொமாண்டோப் படையணியின் எதிர்பார்ப்பாகும். நிலத்தில் நடந்துசென்று தாக்குவது, வானூர்தி மூலம் இறக்கப்பட்டுத் தாக்குவது, கடல் மார்க்கமாகச் சென்று தாக்குவது என்று கொமாண்டோப் பயிற்சியில் பல பிரிவுகள் இருந்தபோதும் நான் கே-9 குறூப் என்கிற பயிற்றப்பட்ட நாய்களுடன் சென்று தடயங்களை அறிந்து ஏனைய படையணிகள் தாக்குதலை மேற்கொள்ள உதவும் பயிற்சியையே சிறப்பாகப் பெற்றேன். இந்தப் படையணியிலேயே எனது நீண்ட காலச் சேவையும் இருந்தது. இதனால் என்னைக் கே-9 சாமரகுமார என்றே அழைத்தனர்.

இந்த நாய்களைக் கொண்ட எமது அணி நாட்டின் முக்கிய இடங்களைப் பாதுகாப்பதுடன் சிறப்பு அதிதிகளுக்கான பாதுகாப்புக்கும் களமிறக்கப்பட்டது. இத்தகைய சிறப்புச் சேவைக்கு 5 ஆண்டுகள் களத்தில் நின்று பணியாற்றிய பின்னரே சந்தர்ப்பம் வழங்கப்படும்.

2008இல் புலிகள் யால பகுதியைத் தாக்கினர்

வன்னிப்போர் நடந்தபோது அதைத் திசைதிருப்பிப் படையினரை யால பகுதிக்கு என்று சிலர் கூறினார்கள். இது வழமையாகவே 'டி' பிரிவுக்கும் 'பி' பிரிவுக்கும் இடையில் நிலவும் கயிறு முப்புத்தான்.

களுத்துறைச் சிறைக் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் பற்றி டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கேட்டபோது உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் எப்போது வேண்டுமானாலும் யாரும் ஈடுபடலாம். அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை - என்று ஜோன் அமரதுங்க கூறினார் என்றொரு செய்தி 15.7.2002 அன்றைய வீரகேசரிப் பத்திரிகையில் வெளியாகியது. சிறைச்சாலைக்குப் பொறுப்பான ஓர் அமைச்சர் இவ்வாறு பதிலளித்திருப்பது கைதிகளை வேதனைப்படுத்தும் என்பதை அவர் கருத்தில் எடுத்தாகத் தெரியவில்லை.

16.7.2002 அன்று கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு வழக்குக்காகப் போய்வந்த ராமகிருஷ்ணன் என்ற கைதியிடம், அவசரப்பட்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட வேண்டாம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பூடாக அழுத்தம் கொடுக்கவிருக்கிறோம் அது சரிவராவிட்டால் நான் நேரடியாகப் பிரதமருடன் கதைப்பேன் உங்களின் விடுதலைக்கு ஏற்பாடு செய்வேன் என்று சட்டத்தரணி சிறிகாந்தா சொன்னார். ஆனால் களுத்துறைச் சிறைச்சாலையில் அவரது கருத்துக்களுக்குச் செவி சாய்க்கும் நிலையில் கைதிகள் இருக்கவில்லை. காரணம் தமிழ் அரசியல்வாதிகள் தமது வாய்மையைக் கைதிகள் மத்தியில் எப்போதோ இழந்திருந்தார்கள். அன்றைய தினமே சூரியன் எவ்.எம். செய்தியில் உயிருடன் விடுதலை செய் அல்லது சடலமாக உறவினரிடம் ஒப்படை என்ற கோரிக்கையுடன் களுத்துறையில் தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர் என்றொரு செய்தி வெளியாகியது. அன்றைய தினமே கைதிகளின் விடுதலை தொடர்பாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமை அமைச்சரைச் சந்தித்துப்பேசவுள்ளார் என்றும் ஒரு செய்தியும் வெளிவந்தது. ஆனாலும் தலைமை அமைச்சர் சொன்ன பதில் பற்றி எந்தச் செய்திகளும் வரவில்லை.

(தொடரும்)

மடை மாற்றுவதற்காகப் புலிகள் தாக்குதல் ஒன்றை முன்னெடுத் தார்கள். இந்தத் தாக்குதல் நடந்ததும் எமது அணியை யால தல்கஸ்மங்கட பகுதிக்குச் செல்லுமாறு பணிக்கப்பட் டது. அந்தப் பகுதியிலேயே புலி களின் அணி ஒன்று செயற்படுகிறது என்று தகவல் கிடைத்தது. தக்குதல் நடந்த இடத்துக்கு நான் நாய்களுடன் சென்றேன். 8 பேர் கொண்ட 3 குழுக்களாகக் கொமாண்டோ அணி தயார்ப்படுத்தப்பட்டது. இரவு நேரம் உலங்கு வானூர்தி மூலம் காட்டுப் பகுதிக்குள் இறக்கப்பட்டோம். புலிகளின் தாக்குதலில் படையினர் பலர் கொல்லப்பட்டிருந்தனர். மேல திக துருப்புகள் அங்கு இறக்கப்படும் தாக்குவோம் என்று புலிகள் காத் திருப்பார்கள் என்று எமக்குத் தெரி யும்.

தடயங்களை வைத்துப் பல விடயங்களை அனுமானிப்பேன்

தாக்குதல் நடந்த பின்னர் அங்கு சென்று அந்த இடத்தில் கிடைக்கும் தடயங்களை ஆராயும்போது நடந்துமுடிந்த தாக்குதலில் எத்தனைபேர் கலந்துகொண் டார்கள், அதில் ஆண்கள் எத்தனை பெண்கள் எத் தனை, அவர்களின் உயரம், நிறை எனப் பல விடயங் களை அங்கு கிடைக்கும் கால்தடயங்களை வைத்து ஆராய்ந்து கண்டறியும் பயிற்சிகள் எமக்கு வழங்கப் பட்டிருந்தன. நாயை வைத்துத் தடயங்களை அறிவ தற்கு முன்னதாக நாங்கள் அவற்றை அனுமானிப்ப தற்காகவே அந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. எமது அணியில் 24 பேர் இருந்தாலும் அவற்றைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் எனக்கு மட்டுமே இருந்தது. அதை வைத்து நாய்க்குத் திசையைக் காட்டவேண்டும். நாயின் மோப்ப சக்தியும் கண்ணால் பார்த்து அனுமா னிக்கும் எனது திறனும் முக்கியமானவை.

புறூலைற் மற்றும் சுனோவி

யாலவில் நாம் தரையிறக்கப்பட்ட பகுதியில் ஒருவர் காயப்பட்டிருப்பதற்கான தடயம் இருந்தது. காயப்பட்ட வரை காட்டு வழியால் தூக்கிச் செல்லும்போது அவர்க ளால் வேகமாகச் செல்லமுடியாது என்று அனுமானித் தேன். எனது நகர்வின் மூலம் எவ்வளவு தூரத்தில் அவர்களைச் சந்திக்க வாய்ப்புண்டு என்றும் தீர்மானித் தேன். அப்போது என்னுடன் புறூலைற் என்ற நாய் இருந்தது. அது குரைக்காமல் படைச் சிப்பாய் ஒருவன் அந்தச் சூழலில் எவ்வாறு அவதானமாக நடந்துகொள் வானோ தனது மோப்ப சக்தியை வைத்து அதைவிட அவதானமாக நடந்து கொள்ளும் ஆற்றல் நிறைந்தது. அது தான் அனுமானித்த விடயத்தை அங்க அசைவு களாலும் கண் அசைவுகளாலும் எனக்குக் காட்டும்போது அது என்ன சொல்ல முயற் சிக்கிறது என்பதை நான் புரிந்துகொள்வேன். புறூலைற் 4 மாதக் குட்டியாக இருக்கும் போது என்னிடம் கையளிக்கப்பட்டது.

இரவு - பகல், தட்ப வெப்ப சூழலுக்குப் புறூலைற்றைப் பயிற்றுவித்திருந்தேன். புறூலைற்றை விடச் சுனோவி என்றொரு நாயும் இருந்தது. அதன் செய்பாடு மிகவும் துல்லியமானதாக இருக்கும். அதன் செயற்பாடு காரணமாகப் படையி னருக்கு வழங்கப்படுவதுபோல ரணசூர பதக்கம் அதற்கு வழங்கப்பட்டது. அது இறந்தபோது படை மரியாதையுடன் சிங் கக் கொடி போர்த்தி அடக்கம் செய்யப் பட்டது.

நாய்களுக்கான பயிற்சியை எமக்கு மலேசியாவைச் சேர்ந்த செரன்தலி என்பவர் வழங்கினார். அவர் முக்கியமாக நாயின் தடயவியல் பயிற்சியை வழங்கினார். கண்பார் வையால் அறியும் பயிற்சியையும் வழங்கினார்.

(தொடரும்)

நாய்களுக்கான பயிற்சியை எமக்கு மலேசியாவைச் சேர்ந்த செரன்தலி என்பவர் வழங்கினார். அவர் முக்கியமாக நாயின் தடயவியல் பயிற்சியை வழங்கினார்.

சுவீடன் அரசுப் பள்ளியில் தமிழ் மொழிக் கல்வி

விஜய் அசோகன்

06

ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றச் சட்டத்தில், தாய்மொழி வழியிலான கல்வி முக்கியமான ஒன்று. நோர்டிக் நாடுகளான சுவீடன், நார்வே, ஃபின்லாந்தில் மேலும் வலுவான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு

வருகின்றன.

நோர்வே நாட்டில் வசித்துக்கொண்டிருந்தபோது, தமிழ் மொழிக்கான பாடங்கள் அரசுப் பள்ளிகளில் இருப்பதை ஈழத் தமிழர்களால் நடந்தது என எண்ணிக்கொண்டிருந்தேன். ஆதலால், அங்கு வசிக்கும் வரை தாய்மொழிக் கல்விக்கானத் தேடலை ஆய்வு நோக்கில் நடத்தவில்லை. சுவீடன் புலம்பெயர்ந்த போது, அங்கு இருந்த ஆச்சர்யமூட்டும் தாய்மொழி களுக்கான கல்வித் திட்டங்கள் வழியாக ஆழமான தேடுதலை மேற்கொள்ளத் தொடங்கினேன்.

நவீன உலக ஒழுங்கில், ஆங்கில மொழியால் மட்டுமே சாதிக்க இயலும் என்கிற அசைக்க முடியாத கருத்தாக்கம் காலனியாதிக்கச் சுவட்டில் இருந்து உருவானது என்கிற புரிதல் இதன் பின்னரே எனக்கு ஏற்படத் தொடங்கியது. அதோடு, சீன நாட்டின் பல்கலைக்கழக அனுபவமும் தாய்மொழிக் கல்விக்கான வலுவான கருத்தினை எனக்குள் விதைத்தது.

நோர்வேவின் அனுபவமே அனைத்திற்கும் தொடக்கம்

நோர்வே நாட்டினில் எங்கள் குழந்தைகள் கருவாகி, பிறந்து, வளர்ந்தக் காலங்களில் மருத்துவர்களும் மழலையர் பள்ளிகளிலும் எங்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டவையும் நாங்கள் உணர்ந்தவையும் எங்கள் குடும்பத்தில் தமிழ்மொழி தொடர்பான புத்துணர்வை ஊட்டியது.

குழந்தைகள் கருவில் இருக்கும் தருவாயில் நோர்வே அரசு மருத்துவமனைகளில் இரு வாரங்களுக்கு ஒருமுறை தொடர் உடல்நலச் சோதனை மேற்கொள்வர், கருவில் வளரும் குழந்தை குறித்தும், தாயின் உடல் மற்றும் மனநலன் சார்ந்த புரிதலும் தந்தைக்கும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், சில சோதனைகளின் பொழுதும் தந்தையும் உடன் இருத்தல் அவசியம்.

அப்போது, வீட்டில் மொழி உச்சரிப்புகள் மற்றும் குழந்தையின் வளர்ச்சித் தொடர்பான கேள்விகளுக்கு, 'பன்மைக் காலாசாரச் சூழலில் வாழ்வதால், குழந்தையின் மனநல வளர்ச்சியில் நேர்மறையான உறுதியினை வளர்க்க தாய்மொழியில் உரையாடுவது அவசியம்' என மருத்துவர்களும், 'நோர்வேஜிய மொழி தொடர்பான குழந்தைகளுக்கான பயிற்சியினை மேற்கொள்வது எங்கள் பொறுப்பு. அதற்கு அடித்தளமாக குழந்தைகளோடு வீட்டினில் தாய்மொழியில் உரையாடி, குழந்தையின் அடிப்படைச் சிந்தனைக் கட்டமைப்பை வளர்த்தெடுக்க வேண்டும்' எனப் பள்ளியிலும் கற்றுக்கொடுத்தார்கள்.

தாய்மொழியும் குழந்தையின் செயல்பாடுகளும்

குழந்தை பிறப்பதற்கு 10 வாரங்கள் முன்பிருந்தே,

ஒலியினை கேட்கத் துவங்குகிறது. பிறந்தது முதலே, தாயின்மொழியின் ஓசையால், தன்னைப் பாதுகாப்பாக வும், மகிழ்வாகவும் கருதுகிறது. இத்தகைய தருணங்களில் இருந்தே, குழந்தையின் தாய்மொழியும் மூளையின் செயல்பாடும் ஒன்றாகிறது.

ஒரு குழந்தை பிறந்தது முதல் ஒலியின் அடிப்படையில் அனைத்தையும் பகுத்துணரத் தொடங்குகிறது. இவ்வுலகில் அனைத்து மொழிகளையும் உள்ள டக்கினால், மொத்தமாக **800** விதமான ஒலிகள் உள்ளன. குழந்தை இயற்கை வரம், இத்தகைய **800** ஒலிகளையும் பிரித்து உணரும் ஆற்றல் கொண்டது.

பிறந்தது முதல் இத்தகைய ஆற்றல் உண்டு என்றபோதிலும், குழந்தை பிற மொழியினைக் கற்க, பகுத்துணர, தொடர்ச்சியான மூளையின் செயல்பாடுகளில் வாய்ப்பு உள்ளது எனினும், முதல் ஆறு மாதத்தில் தன்னைச் சுற்றி ஒலிக்கப்படும் மொழியில் இருந்துதான் மூளையின் தொடக்கக் கால செயலோட்டங்கள் உருவாகிறது. அதனா லேயே, பிற மொழியினை கல்வி மொழியாக ஏற் கும் முன்னர், குழந்தையின் அடிப்படை மூளை யில் பதிந்துள்ள மொழியின் வழியே தொடக்கக் கால கல்வியின் மூலம் அறிவூட்டுவது நீண்ட கால ஆரோக்கியமான மூளை செயல்பாட்டிற்கு உகந்ததாகிறது.

இதில் மிகக் குறிப்பாக, குழந்தை பிறந்தது முத லான மூளையின் செயல்பாட்டின்படி, அந்தக் குழந்தையுடன் நேரடியாக உரையாடும் சொற்கள், ஒலி, மொழியில் இருந்துதான் அக்குழந்தை தன் சிந்தனைக்கும், தன் உச்சரிப்பிற்கும், செயல்பாட்டிற்கும் எடுக்கிறது. தன்னுடன் நேரடியாக பேசப்படாத எந்த ஒலியினையும் அது தாய்மொழியின் ஒலியே எனினும் அக்குழந்தையின் மூளையின் செயலோட்டத்தில் இடம்பெறாது.

குழந்தை தனது இரண்டாம் வயதில் இருந்து, தான் பார்க்கும் பொருட்களின் பெயரை, தன் சுற்றத்தார் சுட் டிக்காட்டி தன்னுடன் உச்சரிக்கும் வார்த்தையையும் பொருத்திப்பார்த்து, தனக்குத் தெரிந்த தாய்மொழியோடு தன் வாழ்வின் அனைத்து நொடிகளையும் இணைத் துக்கொள்கிறது. கிட்டத்தட்ட, இத்தருணத்தில் இருந்து குழந்தை தாய்மொழி வழியே தனது கற்றலைத் தொடங் குகிறது எனலாம்.

இத்தகைய நிலையில் இருந்தே, அக்குழந்தை பள் ளிக்கு வரும் முன் **3,000** சொற்களை மூளையில் பதிந்து வளர்ந்துவருகிறது.

ஒரு குழந்தை பிறந்தது முதல் ஒலியின் அடிப்படையில் அனைத்தையும் பகுத்துணரத் தொடங்குகிறது

மருத்துவக் கல்வியும் தாய்மொழி மதிப்பெண்ணும்

நோர்வேயில் பள்ளிக்கூட மேல்நிலை வகுப்பில், இயற்பியல், வேதியியல், உயிரியியல், கணிதம் உள் ளிட்ட பாடப்பிரிவுகளோடு, சர்வதேச மொழிகள் (ஜெர் மன், பிரெஞ்சு, ஸ்பானியம், தமிழ், பெர்சியம், அரேபி யம் உள்ளிட்ட மொழிகளில்) ஒன்றை மாணவ, மாணவி

யர்கள் தேர்ந்தெடுத்து தேர்வு எழுத வேண்டும். மேல் நிலை வகுப்பு மூன்று ஆண்டுகளிலும் இந்த மொழிப் பாடங்களில் ஒன்றில் தேர்வு எழுதினால், இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியியல் பாடங்களில் மதிப் பெண் குறைந்திருந்து, இம்மொழிப் பாடத் தேர்வில் மதிப்பெண் அதிகமாக வாங்கியிருந்தால், மருத்துவம் / பொறியியல் சேர்க்கைக்கான கூட்டு மதிப்பெண்ணில், குறைந்த மதிப்பெண் வாங்கிய பாடத்தை நீக்கிவிட்டு மொழிப்பாட மதிப்பெண்ணைச் சேர்த்துக்கொள்ளலாம்.

அதாவது, நார்வே நாட்டில் தமிழ் மொழி பாடத்தில் பெறும் மதிப்பெண், நோர்வே நாட்டின் மருத்துவக் கல்வி நுழைவிற்கு உதவுகிறது. சமீபத்தில் நோர்வே நாட்டில் மருத்துவக் கல்வி யியல் சேர்ந்த தமிழர்களின் எண் ணிக்கை பெருகிவருகிறது. அதற்கு மிக முக்கியக் காரணமாக என் அனு பவத்தில் இருந்து பார்த்தால்கூட, எனக்குத் தெரிந்து நான் தமிழாராசிரி யராக வகுப்பெடுத்த பலரும் தமிழால் உயர்வு பெற்றவர்களே!

இத்தகைய அனுபவம் தந்த பாடத் தில், தமிழ்நாட்டில் அரசுப் பள்ளியில், தமிழ்வழிப் பிரிவில் என் குழந்தைகளை ஒன்றாம் வகுப்பில் சேர்த்துப் படிக்க வைத்தேன். பிறகு, மீண்டும் சுவீடன் வர வேண்டும் என்ற சூழலில், அவர்களுக்குத் தமிழ் மட்டுமே தெரிந்திருந்தது.

சுவீடன் பள்ளியில் சேரும் குழந்தைகளோடு பள்ளி நிர்வாகம் அல்லது மாவட்ட நிர்வாகத்தின் ஆசிரியர்கள் கலந்துரையாடி அவர்களின் எண்ண ஓட்டம், அவர்களின் அன்றைய கல்வியின் நிலை, செயற்பாடுகள் குறித்து

அறிந்து அதற்கு ஏற்றவாறு பயிற்சி வழங்கவும் வளர்த்தெடுக்கவும் பள்ளி நிர்வாகத்திற்கு அறிக்கை கொடுப்பர்.

சுவீடனிற்குப் புதிதாக வந்திருந்த எங்கள் குழந்தைக்கும் அத்தகைய நேர்முகக் கலந்துரையாடல் நிகழ்ந்தது, ஆனால் மாவட்ட நிர்வாகத்தின் தமிழாசிரியர் துணை கொண்டு, முழுக்க முழுக்க தமிழில் நடந்தது. பிறகு, தமிழ் தவிர வேறு மொழியே தெரியாததால், பள்ளி நிர்வாகம் எங்கள் மகன் ஒருவருக்காக வாரத்தில் ஒருநாள் மாவட்ட நிர்வாக தமிழாசிரியர் கொண்டு சிறப்பு வகுப்பினை தமிழ் வழியில் நடத்தி மெல்ல மெல்ல சுவீடிஷ் மொழி அறிவினையும் பாட அறிவினையும் வளர்த்தெடுத்தார்கள்.

இன்றும்கூட, அரசுப் பள்ளியில் பயிலும் அனைத்துத் தமிழ் மாணவர்களுக்கும் வாரத்தில் ஒருநாள், அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறான மாணவ எண்ணிக்கையினைக் கொண்டு, பொது வகுப்பினைத் தமிழ் மொழிப் பாடத்தில் நடத்துகிறார்கள்.

ரெலோவின் வழி தனி வழி?

சத்தியநாதன்

2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை பல தேர்தல்களில் பங்கெடுத்திருக்கிறது. ஆனபோதிலும் அந்தக் கட்சியை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தோற்றுப்போனாரா? அல்லது திட்டமிட்டுக் காலம் தாழ்த்தி வந்தாரா? எனப் பல கேள்விகள் இருக்கின்றன. இந்த விடயத்தில் தூர நோக்கோடு அவர் செயற்பட்டதாகத் தெரியவில்லை.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனிப்பெரும் கட்சியாக இருக்கிறபோதிலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்குகில் பல அங்கத்தவர்களை இழந்து தோல்விகளைச் சந்தித்த கட்சி இதுவே. தலைவர், செயலர் உட்படப் பலர் தோல்வியடைந்துள்ளனர். இந்த நிலையில் ரெலோ வன்னியில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கிழக்கில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் **2020** தேர்தலில் பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றுமோர் கட்சியான புளொட் தூங்கும் பங்காளியாகவே இருந்து வருகிறது. இந்தக் கட்சி பக்கம் சார்ந்தால் என்ன சாரா விட்டால் என்ன பெரிதாக எதுவும் நடந்துவிடப்போவ தில்லை என்ற நிலையே காணப்படுகிறது. புளொட் தலைவர் சித்தார்த்தன் மட்டுமே தேர்தலில் வெற்றி பெற்றிருப்பதால் பேரம் பேசும் ஆற்றல் கூட்டமைப்புக்குள் அதற்கு இல்லை.

சுரேந்திரனின் வருகை

குருசாமி சுரேந்திரனின் வருகை ரெலோ அமைப்பைப் பல வழிகளிலும் கூட்டமைப்புக்குள் தமிழ் அரசுக் கட்சிக்கு சவால் விடும் அமைப்பாக வளர்த்திருக்கிறது. ரெலோ அமைப் பின் அந்த இடத்தில் சட்டத் தரணி சிறிகாந்தா நீண்ட காலமாக இருந்தபோதிலும் வெறும் அறிக்கைவிடும் நபராக இருந்தாரே தவிர உள்நாட் டிலோ வெளிநாட்டிலோ சிறந்த செயற்பாட்டாளராக இருக்கவில்லை. சுரேந்திரனின் வருகை ரெலோவை ஓரளவிற்குப் பலப்படுத்தியிருக்கிறது. உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்களை சந்திக்கும் விடயத்தில் தற்போது ரெலோ முன்னேறியிருப்பது தெரிகிறது.

சுமந்திரனின் நிலை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு ஏறத்தாழ **20** ஆண்டுகள் கடந்த நிலையில் அந்தக் கட்சியைப் பதிவு செய்ய முடியாத சம்பந்தன் இனப் பிரச்சினைக்கத் தீர்வு காண்பார் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது சம்பந்தனின் கையிலேயே உள்ளது.

மாவீரர்களைப் பயன்படுத்தும்

தமிழ்த் தேசியமும் சிங்கள இனவாதமும்

நியூட்டன்

மாவீரர்தினம் கொண்டாடப்படுவதற்கு ஒரு வாரம் இருந்தபோது 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்ற விடயம் நாடாளுமன்றில் காரசாரமான விவாதமாக இருந்தது. 2023ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 35 வீதத்தைப் பாதுகாப்புக்காக ஒதுக்கியது தவறு என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளின் வாதமாக இருந்தது. விவாதத்தின் முடிவில் அதை வாக்கெடுப்புக்கு விடுமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார். உடனே வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. 81 பேர் ஆதரவாகவும் 10 பேர் எதிராகவும் வாக்களித்தனர். ஏனையவர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. மொத்தத்தில் தமிழ் தேசியம் பேசும் கட்சிகளைத் தவிர்த்து யாரும் பாதுகாப்பு நிதியில் கைவைக்கத் தயாராக இருக்கவில்லை. அது ஏன்?

புலிகள் உயிர்ப்புடன் இருக்கிறார்கள்

நடந்து முடிந்த மாவீரர் தினத்தன்று வடக்கு, கிழக்கு முழுதும் 30 இடங்களில் நினைவேந்தல்கள் நடந்தன. இவற்றை நடத்தப் பல மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களோ, ஏனையவர்களோ இந்தப் பணத்தைச் செலவிடவில்லை என்பது தமிழ் மக்களுக்கே நன்கு தெரியும். அவ்வாறெனில் அதற்கான பணத்தை யார் செலவிட்டார்கள்...?

ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடருக்குச் செல்வதாகக் கூறிக் கொண்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மாவீரர் தினத்துக்கான நிதியைப் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர் என்று சமூக வலைத்தளங்களில் விவாதிக்கப்படுகிறது.

இந்த விடயம்தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிங்கள மக்களுக்கும் பௌத்தபீடங்களுக்கும் முப்படையினருக்கும் தேவைப்பட்டது. போர் இல்லை பிறகேன் பாதுகாப்புக்கு இவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்ற தமிழ்த் தரப்புகளின் கேள்விக்கும் இங்கே பதிலுண்டு. புலிகள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் உயிர்ப்புடன் இருக்கிறார்கள் எந்நேரமும் அவர்கள்

கூட்டமைப்புடனான 20 வருட ஒத்துழைப்புக்குப் பின்னர் செல்வம் அடைக் கலநாதன் தனது தலைமையில் கட்சிகளை இணைத்துச் செயற்படும் நிலைக்கு முட்டிமோதுவது தெரிகிறது.

மாவீரர் தினம், வடக்குக் கிழக்கில் நடக்கும் ஏனைய விடயங்கள் பலவற்றில் செல்வம் அடைக்கல நாதன் களமிறங்கி செயற்படுவது தெரிகிறது.

அண்மையில் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு லைக்கா நிறுவனத் தலைவர் 25 லட்ச ரூபா வீதம் வழங்கிய நிகழ்விலும் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்டார்.

சம்பந்தன் தலைமையில் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேசுவது என்று சுமந்திரன் விடுத்த அழைப்புக்கு செல்வம் அடைக்கல நாதன் இசைந்து போகவில்லை. தற்போது அவரது செயற்பாடுகள் சம்பந்தனுக்குத் தலையிடி கொடுத்திருக்கின்றன என்பது வெளிப்படை.

ரெலோவின் தனி வழி முன்னெடுப்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை அதிகம் பாதிக்கும். அது சுமந்திரனின் முதன்மையையும் சற்றுப் பின்தள்ளச் செய்யும். கூட்டமைப்புக்குள் சுமந்திரனின் நிலை ரெலோவின் பேச்சாளராக குருசாமி சுரேந்திரன் அறிவிக்கப்பட்டதிலிருந்து மங்கத் தொடங்கியிருப்பதாகவே தெரிகிறது.

ஆனால், இதெல்லாம் தமிழ் மக்களுக்கு நன்மை விளைவிக்கும் வளர்ச்சிகளா என்று கேட்டால், ஆம் என்று சொல்லக்கூடிய அறிகுறிகள் எவையும் தென்படவில்லை. தமிழ்க் கட்சிகள் தம்மை மக்களிடையே நிலை நிறுத்திக் கொள்வதற்கான பலப் பரீட்சையைத் தமக்குள்ளேயே போட்டுக்கொள்கின்றன என்பதற்கப்பால் இதன் பயன்கள் மக்களுக்கு வெளித் தெரிய இன்னும் நீண்ட காலம் பிடிக்கும்.

உயிர்த்தெழலாம் என்பதை உறுதிப்படுத்தும் வாய்ப்பு இதன் மூலம் அரச தரப்புக்குக் கிடைத்திருக்கிறது. அரசின் பாதீட்டில் பாதுகாப்புக்கான அதிக நிதி ஒதுக்கீட்டை சிங்களவர்களோ தமிழர்களால் பாதிக்கப்பட்ட தரப்புகளோ எதிர்க்காமல் இருப்பதற்கு அவர்கள் மாவீரர் நாளைப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

பயங்கரவாதிகளுக்குக் கொண்டாட்டம்

பயங்கரவாதிகளுக்கு நினைவுநாளைக் கொண்டாடும் நாடொன்றில் வாழ்வதையிட்டு நான் கண்ணீர் வடிக்கிறேன் என்று படையினருக்கான நிகழ்வு ஒன்றின் போது படை உயரதிகாரிகள் மத்தியில் பாதுகாப்புச் செயலரான ஜெனரல் கமால் குணரட்ண ஒரு தடவை உரையாற்றியிருந்தார். அவர்களின் இந்தக் கருத்துக்கு நடந்து முடிந்த மாவீரர் தினம் மிகச் சாதகமான பதிலைக் கொடுத்திருக்கிறது. இவற்றால்தான் புலிகள் இல்லாவிடினும் அவர்களின் விடயத்தில் மேலும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது என்று அரசு தன்னை நியாயப்படுத்திக்கொள்ள வழியேற்படுத்தப்படுகின்றது. இல்லாவிடில் எதிர்காலத்தில் அது சிங்கள மக்களுக்கு எதிராக எழக்கூடும் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது.

தமிழத் தலைவர்களும் மாவீரர் தினமும்

மாவீரர் தினத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு அரசு அனுசரணை வழங்கியதற்காக நன்றி கூறுகிறேன் என்று தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றில் அறிவித்தார். அது கன்சார்ட்டிலும் பதியப்பட்டது. அதேவேளை செல்வம் அடைக்கலநாதனோ அவரது கட்சி ஆதரவாளர்களோ எங்குமே மாவீர்தின நினைவேந்தலில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. மாவீரர் தினத்திற்காக ஆட்சியாளர்களைப் பாராட்டும் நிலைப்பாட்டில் சம்பந்தனோ, சுமந்திரனோ, சித்தார்த்தனோ, விக்னேஸ்வரனோ இருக்கவில்லை. எப்போதும் போல இந்த விடயத்தில் அவர்கள் கழுவுகிற மீனில் நழுவும் மீன்களாகவே நடந்துகொண்டார்கள்.

அதேவேளை மாவீரர் தினத்தை நடத்துவதற்காகப் படையினருடனும் காவல்துறையினருடனும் முரண்பட்ட கஜேந்திரகுமாரோ செல்வராசா கஜேந்திரனோ சிறிதரனோ அரசுக்கு நன்றி சொல்லவில்லை. அது தாங்கள் சிங்களப் படைகளுக்கு எதிராகப் போராடிப் பெற்ற வெற்றியே தவிர இலங்கை அரசின் தயவில் செய்த மாவீரர் நிகழ்வு அல்ல தமது துணிவால் சாதித்த விடயமாகக் காட்டுவதன் மூலமே அடுத்துவரும் தேர்தலில் தம்மை நிலைநிறுத்த முடியும் என்பது அவர்களது நோக்காக இருந்திருக்கும்.

மாவீரர்களை நினைவேந்தும் விடயத்தில் மாவீரர் குடும்பங்களுக்கு ஒரு படிப்பினை கிடைத்திருக்கிறது. பல கிராமங்களில் மாவீரர்களின் பெற்றோர் அழைக்கப்படவும் இல்லை, மதிப்பளிக்கப்படவும் இல்லை, மரக்கன்றுகள் வழங்கப்படவும் இல்லை. ஏற்பாட்டாளர்கள் இந்த விடயத்தைத் தமது கட்சிச் செல்வாக்குள்ள பகுதிகளில் மட்டுமே செய்திருப்பது தெரிகிறது. நடந்துமுடிந்த மாவீரர் தினமானது ஏற்பாட்டாளர்களுக்கு வாக்குகளைச் சேர்ப்பதற்கும் புலிகள் உயிர்ப்புடன் இருக்கிறார்கள் என்று குமுறும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு வாக்குகளை அள்ளிக் கொடுக்கவுமே உதவியிருக்கிறது.

வறுமையிலும் பல அல்லல்களுக்கு மத்தியிலும் மாவீரர் குடும்பங்கள் வாழும் நிலையில் மாவீரர்கள் மீண்டும் ஒரு தடவை தமிழ், சிங்கள அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

1970ஆம் ஆண்டில் தேர்தலில் தோல்வியுற்ற ஜெ.ஆர் ஜெயவர்த்தன அப்போது வெல்வாக்குடன் இருந்த சிறிமாவின் அரசை வீழ்த்துவதற்காக **1976**இல்

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்குத் தேர்தலில் தோல்வியடைந்திருந்த அமிர்தலிங்கத்தைத் தூண்டினார் என்கிற விமர்சனங்கள் உண்டு. அமிர்தலிங்கம் அறிவித்த தமிழீழம் ஜெ.ஆரையும் அமிர்தலிங்கத்தையும் **1977**தேர்தலில் வெற்றியடைய வைத்தது. அதேபோன்றதொரு சூழலையே இந்த முறை மாவீரர் தினத்தில் ரணில் ஏற்படுத்தியிருந்தார். தன்னையும் ராஜபக்சாக்களையும் சிங்கள மக்கள் மத்தியில் இதன் மூலம் பலப்படுத்தியிருக்கிறார். தமிழ்க் கட்சிகளும் தமது அரசியலுக்குப் பயன்படுத்தியிருக்கின்றன.

இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

02



மு.திருநாவுக்கரசு

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப் பகத்தால் கிளிநொச் சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்து ரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தி யாயத்தைச் செம்மண் ணில் வாசிக்கத் தருகிறோம்.

இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

பிரித்தானியர் தமது நோக்கின் அடிப்படையில் இலங்கையை இந்தியா வுடன் பொருத்தி நோக்கியதன் பிரகாரம் இன, மொழி அடிப்படை களிலான ஒரு சமஷ்டி முறைக்குச் செல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்தனர். எனவே மேற்படி சமஷ்டிக்குப் போகாத வகையில் டொனமூர் குழுவினர் பிராந்திய ரீதியான மாகாண அடிப்படையில் உள்ளூராட்சி முறையைவிட சற்று மேம்பட்ட வகையிலான மாகாணசபைகள் அமைப்பதைப் பரிசீலிக் குமாறான ஒரு யோசனையை முன்வைத்திருந்தனர். இப்படி ஒரு சறுக்கலான முன்யோசனையை எதிர்காலப் பரிசீலனைக்காக டொனமூர் குழுவினர் முன் வைத்திருந்தமைக்கான பின்னணியை விளங்குவது இலங்கை சம்பந்தமான நிகழ்கால, எதிர்கால அரசியலில் அந்நியர்கள் எப்படியெல்லாம் சிந்திக்க முடியும் என்பதை விளங்க உதவும்.

கண்டிச் சிங்களவர் டொனமூர் குழுவிடம் ஒருவகைச் சமஷ்டிக் கோரிக் கையை முன்வைத்திருந்தனர். இது பற்றி டொனமூர் குழுவினர் தமது அறிக் கையில் பின்வருமாறு கூறியுள்ளனர், "கண்டித் தலைவர்கள் தம் மாகாணங் களைத் தாமே ஆளவேண்டும் என உறுதியான கோரிக்கை விடுத்துள்ளனர். 1815ஆம் ஆண்டுக் கண்டி உடன்படிக்கையின்படி இதற்குத் தாம் உரிமையு டையவர் என்று இவர்கள் கூறியுள்ளனர்" ஆனாலும் சமஷ்டி முறையை நிரா கரித்த டொனமூர்க் குழுவினர் அதைச் சமாளிக்கும் வகையில் அதற்குச்

சமையல் சமையல்

முறுக்கு

இந்த வாரம் நாம் பார்க்கவிருக்கும் பலகாரம் முறுக்கு. சுப நிகழ்வுகள், விஷேச தினங்கள், விரத நாள்கள், பண்டிகைகள் என ஒன்று தவறாது நம்மவர்களைத் தன்பால் ஈர்த்துள்ள பலகாரம்தான் இந்த முறுக்கு. வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்குத் தேநீரும் முறுக்கும் வழங்கும் பழக்கம் கூட நம்மவர் மத்தியில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. இப்போதெல்லாம் முறுக்கின் வகிபாகத்தைக் கடைகளில் கிடைக்கும் பிஸ்கட் மற்றும் நொறுக்குத்தீனி வகைகள் தம்வசப்படுத்திவிட்டன. ஆனாலும் சுவையாகவும் சுத்தமாகவும் வீடுகளில் தயாரிக்கப்படும் முறுக்குக்கு அடிமையான உணவுப் பிரியர்கள் பலர். தீபாவளி, பொங்கல், புதுவருடம் என்று முறுக்கு இடம் பெறாத பண்டிகைகள் இல்லை எனலாம். முறுக்குகளில் கூடப் பல வகைகள் இருக்கின்றன. அந்த வகையில் இம் முறை முறுக்குத் தயாரிப்பது எவ்வாறு என்று பார்ப்போம்.

தேவையான பொருள்கள்

அரிசி மா - 2கப், கடலை மா - அரை கப், உப்பு - அரைத் தேக்கரண்டி, மிளகாய்த்தூள் - அரைத் தேக்கரண்டி, சீரகத்தூள் அரைத் தேக்கரண்டி, வெள்ளை எள்ளு - ஒரு கரண்டி, வெண்ணெய் - இரண்டு தேக்கரண்டியளவு. அத்தோடு பொரித்தெடுப்பதற்குத் தேவையான அளவு எண்ணெய்.

எப்படிப் பொரிப்பது...?

முதலில் அரிசிமாவு, கடலை மா, உப்பு, மிளகாய்த் தூள், சீரகத்தூள், எள்ளு, வெண்ணெய் ஆகியவற்றைப் பாத்திரம் ஒன்றுக்குள் கொட்டிப் பிசைந்து கொள்ளுங்கள். இளம் சுடுநீர் விட்டுப் பசைப் பதத்தில் ஆக்கிக் கொள்ளுங்கள். இடியப்ப உரல் போன்ற முறுக்கு அச்சுடைய முறுக்குரலுக்குள் புகுத்திப் பிழிந்து எடுங்கள். ஒரே அளவான முறுக்குகளாக எண்ணெய்யில் பொரித்தெடுங்கள். கடலைமாவு மற்றும் எள்ளு ஆகியவற்றைச் சற்று அதிகமாகச் சேர்த்தால் சுவையும் அதிகமாக இருக்கும். முயற்சி செய்து முறுக்குப் பொரித்து வெற்றிபெற்றீர்களானால், தீபாவளி, பொங்கல், வருடப்பிறப்பு என நன்னாள்களில் தவறாது செய்து சுவைக்கலாம்....!

சமாந்திரமாக ஆனால், பூசி மெழுகும் வகையில் எதையோ கூறவேண்டி இருந்ததுபோல் தெரிகிறது. இந்த வகையில் இன, மொழி அடிப்படையற்றதும், பிராந்திய நிர்வாகத் தன்மையைச் சிறிதளவு அரசியல் பரிமாணத்துடன் கலந்து அதுவும் திட்ட வரைபுக்குள் கொண்டுவராது வெறுமனே முன்யோசனைக்கு மட்டும் உரியதான மாகாணசபை முறையைப் பற்றிக் குழு பரிந்துரைத்தது. "...மத்திய ஆட்சியின் குறித்த சில துறைகளை மேற்கொள்ளக்கூடியதாக ஓர் இணைப்புத் தாபனத்தை அமைப்பதும் இதற்கொன மாகாணசபைகளை ஒவ்வொரு மாகாணங்களிலும் நிறுவுவதும் வாய்ப்புடைய ஒன்றாகும். இதனால் சட்ட சபை இப்பொழுது மேற்கொண்டிருக்கும் ஆட்சி அலு வலரின் பெரும்பகுதி, நாட்டின் மாகாணங்களில் நிரந் தரமாக வாழ்கின்ற மக்கட்பாற் சென்றடையும். இதனால் மக்களின் தேவைகளை நன்முறையில் அறிந்தவர்கள் பொறுப்பிலேயே இவ்வாட்சிப் பொறுப்புச் சென்றடையும்... இன்னும் இத்தகைய சபைகள் நாட்டின் பல்வேறு மட்டங்களிலுமிருக்கின்ற வெவ்வேறு சாகியத்தாருடைய சிறந்த அபிப்பிராயங்களைப் பிரதிபலித்து அவ்வப் பகுதிகளை ஆளுகின்ற முறையில் ஒருவிதமான ஊக்கு விப்பினை அளிக்கக்கூடியதாக இருக்கும்"

"பொதுவான ஆட்சிமுறை, பொது வேலைகள், போக்கு வரத்து வேலைகள், நீர்ப்பாய்ச்சல், வேளாண்மை, சுகாதார உடனலச்சேவைகள், கல்வி, நிதி ஆகியவை பற்றிய துறைகளிலே இக் கழகங்களுக்கு மத்தியஆட்சியின் விரிவான அதிகாரத்தை அளித்தல் வேண்டுமோ? போன்ற விவரங்களை ஆராயவேண்டும்" எனக் குழு முன்யோசனை கூறியது. டொனமூர்க் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட இந்த சமஷ்டிக் கோரிக்கையை ஒத்த வடிவம் சிங்கள இனத்தவர்களிடமிருந்தே எழுந்திருந்தது. அதுவும் ஒரே சிங்கள இனத்தவர்கள் மத்தியிற் காணப்பட்ட பிரதேச வாதத்துக்குத் தீர்வாகவே முன்வைக்கப்பட்டது. ஆனால், தமிழர் தரப்பிலிருந்து அப்படி எந்த ஒரு சமஷ்டிக் கோரிக்கையும் அப்போது எழவில்லை.

மாகாண சபைகளை அமைப்பது பற்றிப் பரிசீலிக்குமாறு டொனமூர் குழு தெரிவித்திருந்த யோசனையின் அடிப்படையில் பத்து ஆண்டுகளின் பின்பு அதுவும் டொனமூர் யாப்பின் கீழான ஆட்சி சபையில் மாகாண சபைகள் அமைப்பதற்கான தீர்மானம் எதிர்ப்பின்றி 1940ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறைவேற்றப்பட்டது. மாகாண சபைகள் அமைப்பது பற்றி டொனமூர்க் குழுவினரின் யோசனையின் பேரால் இத்தீர்மானம் பிரேரிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை ஆதரித்துப் பண்டாரநாயக்கா உரை நிகழ்த்தினார். பண்டாரநாயக்கா அப்போது உள்ளூரட்சி அமைச்சராய் இருந்தார். இத் தீர்மானமும் உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரத்துக்கு உட்பட்டதொன்றாகும். நிறைவேற்றப்பட்ட இம் மாகாணசபை பற்றிய தீர்மானமானது இதனை ஒரு நிர்வாக ரீதியான சபையாகத்தான் பெரிதும் கருதியதே தவிர அரசியல் தீர்மானங்களை எடுக்கவல்ல ஒரு சபை என்ற அர்த்தத்தில் இங்கிலாந்தில் காணப்பட்ட கன்றி கவுன்சிலுக்கு" ஒப்பான தாகவே பண்டாரநாயக்கா இதைத் தன் உரையின்போது ஒப்பிட்டிருந்தார். பின்பு இத் தீர்மானங்கூட கிடப்பிற் போடப்பட்டு இறுதியில் கைவிடப்பட்டுவிட்டது. கண்டி - கரையோரச் சிங்களவர்களிற்கிடையேயான வேற்றுமையின் அளவும் குறைய சமஷ்டிக் கோரிக்கையின் உள்ளடக்கமும் அளவும் குறைந்தது.

(தொடரும்)

ஜோதி

உடல் குறைபாடுகளை கடந்தெறிவோம்!

> உங்கள் ஒவ்வொரு வரிடமும் திறமைகள் இருக்கின்றன என்பதை நம்புங்கள். நீங்கள் ஏதேனும் சாதிக்க நினைத்தால் அதற்காகத்தான் கடவுள் உங்களை அனுப்பியிருக்கிறார் என்று நம்புங்கள்

தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே தெரிந்திருந்தால்கூட கருவைக் கலைத்திருப்பார்கள் பெற்றோர்கள். பாவம், அந்த அப்பாவிப் பெற்றோர்கள் பெற்ற ஆண் குழந்தை இரு கைகளும் இல்லாமல், இரு கால்களும் இல்லாமல் பிறந்திருப்பதைப் பார்த்ததும் துடிதுடித்துப் போனார்கள். அக்குழந்தையை வளர்த்தெடுக்கவும், படிக்க வைக்கவும் அவர்கள் பட்ட துயரங்களையும், துன்பங்களையும் வார்த்தைகளால் சொல்லிவிடமுடியாது.

குறைபாடுடைய குழந்தையைப் பெற்றுவிட்டோமே என அழுது புலம்பிய பெற்றோருக்குத் தைரியமும், தன்னம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு செடி போல வளர்ந்து, வாசம் வீசும் பூக்களாகப் பூக்கத் தொடங்கின. ஆஸ்திரேலியாவில் மெல்பர்ன் நகரத்தில் அந்தக் குழந்தை பிறந்திருந்தது. அந்த ஆண் குழந்தைக்கு நிக் வூஜிச் என்று பெயரிட்டனர்.

கொஞ்சம் வளர்ந்து பள்ளியில் சேர்க்கப்போகும் போது அரச, பள்ளியில் சேர்ந்து படிக்க அனுமதிக்கவில்லை. அரசை எதிர்த்து ஒரு மாபெரும் போராட்டமே நடத்தி அரசுப் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தனர் பெற்றோர்கள். பள்ளியில் அவரைக் கிண்டலும், கேலியும் செய்யாத மாணவரும் இல்லை, மாணவியரும் இல்லை. பள்ளி முடிந்து ஒருநாள் வீட்டுக்கு வந்த சிறுவன் வூஜிச் தனது தாயாரைக் கட்டியணைத்துக் கொண்டு "அம்மா, என்னை கருவிலேயே சாகடித்திருக்கக்கூடாதா? பலரும் அவமானப்படுத்துகிற என்னை எதற்காக பெற்றெடுத்தாய்?" என்று கேட்க, தாயாருக்கும் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு எதையும் சொல்லத் தெரியவில்லை, சொல்லவும் முடியவில்லை.

வூஜிச் வளர, வளர அவன் பேச்சு பலரையும் வசீகரிக்கத்

திட்டமிடல் என்பதுறது இதுதானோ?

கதிரேசன் காத்தவராயன்

நேற்றைக்கு அதிலை வாசிகசாலையடிக்குப் போயிருந்தன். அங்கை சம்பரும் கனகரும் ஆளுக்கொரு பேப்பரோடை இருந்தினம். அங்காலையாய் கொஞ்சம் தள்ளி சங்கரியர் இருந்து என்னவோ எழுதிக்கொண்டும் யோசிச்சுக்கொண்டும் இருந்தார். "நீங்கள் இன்னம் படிச்சு முடிக்கயில்லை அந்தாள் சோதினை எழுதி முடிக்கப்போகுது..." எண்டுகொண்டு போயிருந்துகொண்டன். சிரிச்சினம்.

"ல்லைக் கதிரேசண்ணை! உவங்கள் கேக்கிறதுக்கு ஆளில்லையெண்டோ இருக்கிறாங்கள்? பாரண்ணை எழுதிப் போடப்போறன்" எண்டுகொண்டு எழும்பி வந்து கிட்டவாய் இருந்துகொண்டார் சங்கரியர். "ஆரைக்கேக்கப் போறாயப்பா? அப்பிடி என்னத்தைத்தான் கேக்கப்போறாய்?" எண்டு கனகர் கேட்டார். "இஞ்சார் நாட்டு நடப்புகள் தெரியாமலுக்குத்தான் இருக்கிறியளோ? இப்ப நடந்துகொண்டிருக்கிற மண்ணெண்ணைக் கூத்திருக்கல்லே,... நாங்கள் படுகிற பாடு!" எண்டு சங்கரியர் புறுபுறுத்துக்கொண்டிருக்க முருகேசர் வந்து எங்களோடை இருந்துகொண்டார்.

"காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கூத்துகள்.... ஒரே விதமான கூத்துகள்தான் எண்டாலும் தாளம் மட்டும் இன்னும் சரியாப் போடத்தெரியாமலுக்கல்லே இருக்கிறம்?" எண்டு முருகேசர் எல்லாரையும் ஒரு பார்வை பாத்தபடி நிப்பாட்டினார். "உண்மைதான்... பெற்றோலுக்கும் எவ்வளவு அடிபிடியள் கொலையளுக்குப் பிறகுதானே ஒரு வழியைக் கண்டுபிடிச்சனாங்கள்..." எண்டு நான் முடிக்கயில்லை, "அதுதானப்பா! அப்பிடி தொடங்கியது. கைகளும் கால்களும் இல்லையென்றாலும் அவன் ஒரு மாபெரும் பேச்சாளனாக மாறினான். தனது 26-ஆவது வயதில் ஒரு சிறந்த தன்னம்பிக்கை சொற் பொழிவு ஆற்றும் சாதனை மனிதராக மாறிவிட்டான் ஜூஜிச். உலகிலுள்ள அனைத்து மக்களும் அவனது பேச்சை ஆர்வமுடன் கேட்பதற்காக குவியத் தொடங்கினார்கள். ஜூஜிச் பேசுகிறார் என்றால் அரங்கம் முழுவதும் நிற்கக் கூட இடமில்லாமல் நிரம்பி வழியும்.

ஜூஜிச் பேசும் இடங்களிலெல்லாம் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. "கடவுள் இந்த உலகத்துக்குச் செய்ய வேண்டியதை என்னைப் போன்ற ஒரு அசாதாரணப் பிறவி மூலமாகத்தான் செய்து முடிக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். எனக்கு அந்தப் பெரும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. உண்மையில் நான் குறையுடன் பிறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன். இரு கைகளும், இரு கால்களும் இல்லாமல் பிறந்த நான் எனக்குத் தேவைப்படும் எந்த வேலையையும் நான் பிறரைச் செய்யுமாறு எப்போதும் சொல்வதில்லை. எதிர்பார்ப்பதும் இல்லை. எனக்குத் தேவையான அனைத்தையும் நானே செய்துகொள்கிறேன். எனது வாகனத்தை நானேதான் ஓட்டிச் செல்வேன். என் வாழ்வில் நடந்த அவமானங்களையும், கடந்து வந்த கரடு, முரடான பாதைகளையும் சொல்லிச் சொல்லியே பலரை உற்சாகப்படுத்தியிருக்கிறேன். எனது பேச்சைக் கேட்க வந்த எண்ணற்ற மக்களின் தாழ்வு மனப்பான்மையை தவிடுபொடியாக உடைத்தெறிந்திருக்கிறேன்.

"நடக்கவே முடியாமல் என் கூட்டத்துக்கு வந்த பல மாற்றுத்திறனாளிகள் என் பேச்சைக் கேட்டு எழுந்து நடந்திருக்கிறார்கள். சொன்னால் நம்ப மாட்டீர்கள், சிலர் ஓடியும் இருக்கிறார்கள். அவமானங்களையும், அடைந்து வரும் துயரங்களையும் தயவுசெய்து தூக்கி வீசுங்கள். ஒவ்வொரு நாளும் காலை எழுகிறபோது புதிதாகப் பிறந்ததாக எண்ணிக்கொண்டு புதிய பயணத்தைத் தொடங்குங்கள். உங்கள் ஒவ்வொருவரிடமும் திறமைகள் இருக்கின்றன என்பதை நம்புங்கள். நீங்கள் ஏதேனும் சாதிக்க நினைத்தால் அதற்காகத்தான் கடவுள் உங்களை அனுப்பியிருக்கிறார் என்று நம்புங்கள், எளிதில் வெற்றியடைவீர்கள். நான் குறையுடன் பிறந்ததால் எனது வாழ்வில் நான் சந்தித்த சோதனைகளையும் வேதனைகளையும் அவமானங்களையும் பல கூட்டங்களில் சொல்லி அவர்கள் அனைவரையும் மனதளவில் நல்வழிப்படுத்தி இருக்கிறேன்.

"என் உருவத்தை என்னால் மாற்ற முடியாது. ஆனால் உலகம் முழுவதும் மனதளவில் குறைப்பட்ட எத்தனையோ பரிதாபத்துக்குரியவர்களை மாற்றி மறுவாழ்வு வாழ வைத்திருக்கிறேன். நீங்கள் எப்படிப்பட்ட தாழ்வு மனப்பான்மை உள்ளவராக இருந்தாலும் உங்களை என்னால் மாற்ற முடியும்" என்று ஒரு கனமழை பொழிவதுபோல தன்னம்பிக்கை வார்த்தைகளைக் கொட்டுகிறார் ஜூஜிச்.

சர்பிங் விளையாட்டு வீரரான ஜூஜிச் சொன்னதோடு மட்டுமில்லை, செய்து கொண்டும் இருக்கிறார். இவர் ஒரு புத்தகமும் எழுதியிருக்கிறார். அதன் பெயர் என்ன வென்று தெரியுமா? 'கைகளும் இல்லை, கால்களும் இல்லை, அதனால் எனக்கு ஒரு கவலையும் இல்லை'!

கண்கள் இரண்டும் பார்வையற்று இருப்பவர்கள் யாரும் இதுவரை விபத்தில் இறந்ததாக வரலாறு இல்லை. இரு கண்களும் நன்றாக இருந்தவர்களில் பலரையும் விபத்துகளில் பறிகொடுத்திருக்கிறோம் என்பதுதானே உண்மை! உடல் குறைபாடுகள் ஒருபோதும் மனிதர்களை அழிக்க நாம் இடம்தரலாகாது. ஊனம் ஒரு குறையில்லை.

(மார்கழி 3 உலக மாற்றுத் திறனாளிகள் தினம்)

மண்ணெண்ணைக்கும் ஒரு வழியை முதலிலையே செய்திருக்கலாமல்லே?" எண்டார் முருகேசர்.

"உதுகள் ஒரு பக்கமாய்க் கிடக்கட்டும்.... பங் கீட்டு அட்டைக்கல்லே எண்ணை குடுக்க வெளிக் கிட்டவை? எத்தினை குடும்பங்கள் இருக்கு எவ்வ ளவு எண்ணை கிடக்குது எண்ட ஒரு கணக்குக்கூட உவங்களிட்டை இல்லை... ஏற்றுக்கொள்ளு றியளோ?" எண்டு கேட்டார் சங்கரியர் கோவமாய். "உண்மைதான் சங்கரி... இல்லையெண்டால் என் னண்டு இடையிலை முடிஞ்சுதெண்டு சொல்லுறாங் கள்? கணக்கு வழக்கிலை வலு வீக்தான் போலை"... எண்டு கனகர் சொல்லி எரிச்சலாய்ச் சிரிச்சார்.

"உதுக்குள்ளை வெட்டுக் கொத்துக் கணக்கு களும் இருக்கெண்டுமல்லே ஒரு கதை காதிலை பட்டுது. முறையான எண்ணைக்குத்தான் தட்டுப் பாடு.... வெளியாலை கண்டவிலையிலையும் வாங்கிறதிலை தட்டுப்பாடில்லை.... அப்ப கூட்டிக் கழிச்சுப் பாருங்கோவன்"... எண்டு முருகேசர் பிலத் தாச் சிரிச்சார். "அதுதான்!... அதுதான் இப்ப பிரச் சனையே!... மேலிடத்துக்கு உதைத்தான் எழுதிப் போடப்போறன்" எண்டார் சங்கரியர்.

"இஞ்சார் சங்கரி நீ எழுதாட்டில் அவைக்கு உதுகள் தெரியாதோ? அப்பிடியான அறிவோடையோ அவை இருக்கினம்?" எண்டு நான் கேட்டதுக்கு கனகரும் முருகேசரும் "அதுதானே?" எண்டிச்சி னம். "அதது நடக்கவேணும் எண்டதுதானே அவை யின்ரை விருப்பம்.... பொருளாதார நெருக்கடி யுக்கை அரசாங்கச் சம்பளத்தை மட்டும் வைச்சு அவங் களும் என்னத்தைத்தான் செய்யிறது?" எண்டு கொண்டு வல்லியம்மான் வந்து நிண்டு சிரிச்சார். "அம்மான் கதையை ஒட்டுக்கேட்டிருக்கிறியள் என்ன?" எண்டு நான் கேக்க வல்லியம்மான் சிரிச்சார்.

"இஞ்சார் நீங்கள் பொழுதுபோகாமலுக்கு இருந்து கதைக்கிறதை ஒட்டுக்கேட்டுத்தான் உண்மையளை அறியவேணுமோ? பிறந்த குழந்தைப்பிள்ளை சொல் லும் உவங்கடை கூத்துகளை" எண்டு நக்கலாய்ச் சொன்னார் வல்லியம்மான். "உண்மைதானம் மான்"... எண்டன் நான். "எடெயப்பா எல்லாமே திட்டப் படி தான் நடக்குது.... மண்ணெண்ணை வாறதும் தெரி யும்..., சனம் இடிபடும் எண்டும் தெரியும்,... பின் னாலை வாறவைக்கு கிடைக்காதெண்டுறதும் தெரி யும்..., அப்பிடியிப்பிடி குழப்பங்கள் இருந்தாத் தானே வேலை சுவமாய் நடக்கும்.... குளம் கலங் காட்டில் மீன் பிடிக்கலாமோ?" எண்டு கெக்கட்டம் போட்டுச் சிரிச்சுக்கொண்டு வல்லியம்மான் போக வெளிக்கிட்டார்.

"அம்மான் நீங்கள் உந்தப் பங்கிடுகிற வேலை யைப் பொறுப்பெடுங்கோவன்?" எண்டார் சங்க ரியர். "இஞ்சார் சங்கரி அரைக்காப்போத்தலுக்கும் கணக்கிருக்கிருக்கும்,... எப்பவாவது எங்கடை விசயத்திலை ஆரையாவது திருப்பிவிட்ட வரலாறு இருந்தாச் சொல்லு!... கணக்கெண்டாக் கணக்கு.." எண்டுகொண்டு இருந்திட்டார். "அப்ப அம்மான் எல்லாம் திட்டத்தோடைதான் எண்டிறியளோ?" எண்டு கனகர் கேக்க "பின்னையென்ன?" எண்டு சிரிச்சார் வல்லியம்;மான். கதை நீளமாப் போகப் போகுதெண்டது நிச்சியமாச்சு. இப்ப எல்லாத்தையும் சொன்னாலும் சுவையாயிராது. இப்ப கதை சீரிய ஸாப் போகுது. பேந்து சொல்லுறன்.

88

ஐயங்கொண்டான் சுவாமிகள்

எமையறிதல்

புலன்கள்வழி அலைவுறுகின்ற மனம், எதிர்ப் புலன்களைப் பகுத்தாய்ந்து கட்டளையிடுகிற மனம் என்கிற ஒரு விவாதப் புள்ளியில் இப்போது இருக்கிறோம். இப்புள்ளிதான் முக்கி யமானது. இவ்வெதிரெதிர் முனைப்பட்ட விடயப் பரப்புக ளுக்கு இடையேதான் இருக்கிறது எமது வாழ்வென்பதைக்கூட உணர்வதில் தடுமாற்றங்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கி றோம். இங்கேதான் எமக்கான முடிவுகளை எடுக்கவேண்டிய நிலையில் தடுமாறுகிறோம். இவ்வகைப்பட்ட தடுமாற்றமானது ஆரோக்கியமானதா? கேடானதா? எப்படியானது?

பொறிகளை அடக்குங்கள் என்பது இப்போது பெரும் ஐயத் திற்குரியதாகிறது. அப்படிச் செய்வது சாத்தியமானதா? பெறு கையுணர் தூண்டல்களை உணர்வதும் எதிர்வினையாற்றுவ தும் மனமே. அப்படியாயின் மனம் தூண்டற்பெறுகையிலும்

உணர்கையிலும் வெறுமனே சடமாக எந்த எதிர்வினையு மற்று இருக்கவேண்டும். மனம் அவ்வாறானதொரு உறை நிலை யெடுப்பது சாத்தியமானதொன்றா?

தியானம், மன ஒடுக்கம், தவம் என்றெல்லாம் மனத்தை உறை நிலைக்கு இட்டுச்செல்வதாகக் கருதிக்கொண்டிருக்கி றோம். இதுவும் ஒருவிதத்திலான கற்பிதமே என்பதை ஏற்றே யாகவேண்டும். மனத்தை அமைதிப்படுத்தி ஒரு புள்ளியில் நிலைப்படுத்தி வைத்திருக்கும்போது பேரமை தியை உணரலாம் உணர்ந்தோம் என்பனவெல்லாம் மனம் தான் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த அமைதி இப்ப டித்தான் இருக்கும் என்கிற ஒரு சட்டகத்துக்கூடான ஒரு விதமான ஒப்பிடலி னது பெறுதிகள்தான்.

அவ்வாறானதொரு உணர்வு நிலையை குறித்த ஒதுக் கப்பட்ட நேரத்துள் மனம் பெறுகிறதாயின் அங்கு மனம் இயங்கிக்கொண்டிருந்திருக்கிறது. அவ்வாறிருக்கையில் மனம் ஓய்ந்திருந்து உணர்ந்து கொண்டுள்ளது என்கிற கூற்றானது நகைச்சுவையாக இல்லையா? இதனை ஒருவி தமான ஏமாற்றாக ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது? மனம் தன்னையே முதலில் ஏமாற்றுகிறது. தானே ஏமாந்தும்கொள் கிறது எனவும் எடுத்துக்கொள்ளலாம். அப்படி இல்லையா?

கற்பிதமானது அமைதி என்பதற்கான ஒரு உருவை, குணங் களை, குறிகளை, எல்லாம் தன்னுள் வைத்துக்கொண்டிருக் கிறது. அவற்றை தான் கடந்தகாலத்தில் பெற்ற நேரடி மற்றும் பிற ரிடமிருந்தான அனுபவங்களினது மனத்தினது சேமிப்பிலிருந்து மனதே கட்டமைத்து பாதுகாக்கிற விட யங்களே கற்பிதங்கள். இவ்வகைப்பட்ட கற்பிதங்கள் எமது பணியாகிய பகுத்து உணரும் திறனுக்கான எதிரி களில் ஒன்றாக இருந்துகொண்டிருக்கிறது.

பகுத்துணரல் என்பதற்கான முக்கியமான அம்சமான கேள்வியெழுப்புதல் என்கிற நிலைமையையே கேள்விக் குள்ளாக்கி விடுகிறது. நம்புதல் எதிர் நம்பமறுத்தல் என் கிற முரணிலைக்கு எம்மை கற்பிதங்கள் வலிந்திழுத்துக் கொள்கிறது. மனம் எதை எவ்விதமாக எதிர்பார்த்து ஆசை யுறுகிதோ அவ்விதமாகவே அதை அடைவதற்காக முயல் கிறது. நம்புதலின் வழியும் நம்ப மறுத்தலின் வழியும் தன்னை நிலைப்படுத்துவதற்கு கற்பிதங்களை கருவியாக்கிக் கொள்கிறது.

கற்பிதங்களே மனதினது உருவாக்கங்கள்தான். ஆக கற்பிதங்கள் தன்விருப்பு எதிர் வெறுப்பினது விளைவுகளா கவே இருக்கும். ஒப்பிடல்களினது செல்வாக்கு அதிகம திகம் இருப்பதற்கான சாத்தியப்பாடுகளே இருக்கின்றன. உயரமானது என்று கற்பித்து வைத்திருக்கிற ஒரு பொரு ளானது பிற (ஒன்றோ பலவோ) பொருளுடனான ஒப்பிடு கையின் பெறுதிதானே? இந்த அமைதி என்கிற விடய மும் அவ்வாறிருக்க வாய்ப்புகள் உள்ளனவல்லவா?

தொடருந்துப் பயணம் சத்தமாக இருக்கும் என்பது கற்பிதம். பேருந்துப் பயணம் அமைதியானது எனக் கரு துவதனது விளைவுதான் இது. உண்மையாயும் இருக்க லாம். பொய்யாயும் இருக்கலாம். பொதுவான முடிவாக இருக்கமுடியாது. இரைந்துகொண்டு செல்லும் பேருந்து களும் இருக்கின்றன. சத்தமேயில்லாமல் விரைகிற தொட ருந்துகளும் இருக்கின்றன. குறித்த முடிவானது பகுப் பாய்ந்து எடுத்த முடிவாக இருக்கமுடியாது.

மனமானது எந்தவொன்றையும் இன்னொன்றுடன் ஒப்பிடத் தவறுவதில்லை. கற்பிதங்களை மனம் தன்னுள் ஒப்பீடுகளது பெறுதியாகவே அடுக்கி வைத்திருக்கிறது. எதனுடன் அல்லது எவற்றுடன் குறித்தவொரு விடயத்தை ஒப்பீடு செய்துகொள்கிறது? ஒப்பிடலினது நிபந்தனைகள் எத்தகையன? போன்றவற்றைக் கவனத்திற்கொண்டு பகுப்பாய்விற்கு உட்படாத எந்தவொரு பெறுதியும் கேள் விக்குரியதே என்பதை முக்கியமாக மனத்தில் கொள்வது அவசியமானது.

கற்பிதங்களைப் பயன்படுத்துவதற்கான சுயவடிப் பொன்றைச் செய்வது, அதுவும் ஒப்பீட்டு ரீதியாகச் செய் வது அர்த்தமற்றது. நான் எனும் தன்மை ஒருமையை ஒப்பீட்டிற்கு உட்படுத்தலாமா? அப்படியாயின் எதனுடன் ஒப்பிடுவது? எப்படி ஒப்பிடுவது? சிந்திப்போம்.

வாரம் ஒரு சொல்....! 18

பறுவம்

யாழ்ப்பாணத்தவர்கள் மத்தியில் வெறெங்குமில்லாத பலவேறு சொற்கள் பாவனையிலுள்ளன. அவற்றுள் ஒன்றுதான் 'பறுவம்' என்கிற இந்தச் சொல்லும். சந் திரனுக்குப் பல பெயர்கள் இருக்கின்றன. நிலா, நிலவு, அம்புலி, திங்கள், மதி என அவை அமையும். அத்த கைய நிலவானது முழு வட்டமாக - முழு நிலவாகத் தோன்றுவதையே பறுவம் என்கின்றனர்.

இது பௌர்ணமி என்கிற சொல்லின் சுருக்கப் பத மாகவும் உச்சரிப்புச் சுருங்கிய பேச்சு வழக்காகவும் மாறி அமைந்ததாக இருக்கலாம் என்கிற சந்தேகம் பலருக்கு உண்டு. பௌர்ணமி என்றோ முழுநிலவு என்றோ யாழ்ப்பாணத்தவர்கள் உச்சரிப்பதற்கு மாறா கப் பறுவம் என்று உச்சரிக்கவே பழக்கப்பட்டிருக்கலாம். பூரணை - பௌர்ணமி ஆகிய பதங்கள் சுருங்கிப் பறுவம் என்றாகியிருக்கவும் வாய்ப்புகளுள்ளன.

"நாளைக்குப் பறுவம் கடையள் எல்லாம் பூட்டு"
"பறுவத்திலண்டுதான் அவர் செத்தவர்"
"பறுவத்து நிலவு நல்ல வெளிச்சமாய்க் கிடக்கு"
"அமவாசை, பறுவம் வந்தால் ஆளுக்கு விசர் கூடுறது"
"பறுவத்திலண்டு கடல் நீரோட்டம் கடுமையா இருக் கும்"
"நாளைக்குச் சித்திராப் பறுவம் மரக்கறியள் விலையாயிருக்கும்"

ஆகிய பேச்சுவழக்குகள் இவற்றுக்கு உதாரணம்.

ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

40

தாக்குதலில் தலதாமாளிகை முழுமையாக அழியவில்லை

பௌத்த வழிபாட்டுத்தலமான தலதாமாளிகை மீது அதிக சக்தி வாய்ந்த குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் அது பெருமளவில் சேதங்களுக்குள்ளாக வில்லை. வாகனத்தில் பொருத்தப்பட்டு உள்ளே கொண்டுசெல்லப்பட்டுத் தலதாமாளிகைக்கு அருகில் வெடிக்க வைக்கப்பட்டபோதிலும் அந்தக் கட்டடம் பெரியளவில் சிதைவடையவில்லை. ஒரு பெரிய கொங்கிறீட் கட்டடத்தைச் சுக்குநூறாக உடைத்தெறியக் கூடிய சக்தி வாய்ந்ததாக அந்தக் குண்டு இருந்த போதிலும் ஏன் தலதாமாளிகை அவ்வளவுக்குச் சேதப் படவில்லை...? தலதா மாளிகை ஏன் சுக்குநூறாக உடையவில்லை...?

ஏன் அப்படி என்றால், குண்டுவெடிப்பின்போது ஏற்படும் அதிர்வின் ஒரு பகுதியை அங்குள்ள அகழி குறைத்திருக்கிறது. அந்த அகழிக்குள் நீர் நிரப்பப்பட்டி ருந்ததால் அது அதிர்வை உறிஞ்சி சேதத்தைக் குறைத்திருக்கிறது என்பது ஒரு தரப்பு வாதம்.

அதையும் தாண்டி ஏற்பட்ட அதிர்வு தலதாமாளிகை யைப் பெருமளவு சிதைத்திருக்க வாய்ப்பிருந்தும் அவ்வாறும் நடக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் தலதாமாளிகை களிமண்ணால் கட்டப்பட்ட கட்டம் என்பதுதான்.

ஒரு வகைக் காட்டுத் தடிகளை வரிசையாக நட்டு அவற்றைக் காட்டுக் கொடிகளால் சுற்றிக் கட்டி அத னுள் களிமண்ணை வைத்தே தலதாமாளிகை கட்டப் பட்டுள்ளது. அதனால்தான் அது கொங்கிறீட் கட்டங் கள்போல வெடித்துச் சிதறவில்லை. குண்டுத் தாக்கு தலில் சேதமடைந்த தலதாமாளிகையைப் பின்னர் இவ்வாறே சீர் செய்தனர்.

சீர்செய்வதற்குத் தலாதாமாளிகையை அண்மித்த பகுதிகளில் வாழ்கின்றவர்களே பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் காட்டுத் தடிகளையும் களிமண்ணையும் பயன்படுத்திக் கட்டடங்கள், இருப்பிடங்கள், சுவர்கள் அமைப்பதில் பழக்கப்பட்ட பூர்வீக மக்களாக இருக் கின்றனர்.

வெடிகுண்டானது வெடிக்கும்போது அந்த இடத் தில் நிறைந்திருக்கும் காற்றை விரிவடைய வைக்கிறது. அதனால் எத்தகைய பலமான கொங்கிறீட் கட்டடத்தை யும் தகர்த்துவிடுகிறது. ஆனால் தலதாமாளிகையோ களி மண்ணால் கட்டப்பட்டது என்பதால் அவ்வாறு நடக்கவில்லை.

பஞ்சாங்கங்கள் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும்!

ஆ.இளங்கோ



வானியல் என்பது அறிவியல் ஆய்வுகள், அவதானிப்புகள் அடிப்படையில் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் பற்றியும் அவற்றின் இயக்கங்கள் பற்றியும் அறியும் கலையாகும். வானை நோக்குவது காலாகாலமாக கடைப்பிடித்துவரும் மகிழ்வான பொழுது போக்குகளில் ஒன்றாகவும் உள்ளது.

பூமியில் வாழ்ந்த முன்னோரும் பூமியில் வாழும் அறிவியலாளர்களும் சூரியன், சந்திரனின் இயக்கங்கள் ஒரு விதிமுறைக்கமைய நிகழ்வதை அவதானித்தனர். அதன் அடிப்படையில் நாட்கள், பருவ காலங்களை வரையறுத்துக்கொண்டனர். இவற்றை புரிந்துகொள்ள சூரியனின் நகர்வுத் தோற்றம் (அயனம்) பற்றிய விடயத்தையும் தமிழ் மாதப் பிறப்பு (சங்கிராந்தி) பற்றிய விடயங்களையும் அறிந்திருப்பது நிறைவான அம்சமாகும்.

சூரியனின் இராசி வழி நகர்வுத் தோற்றம்

சூரியன் இராசி மண்டலம் வழி நகருகின்றபோது ஒவ்வொரு இராசியிலும் அது நுழையும் நேரம் அந்தந்த சூரிய மாதங்களுக்குரிய தமிழ் மாதப் பிறப்பு எனப்படும். சூரியன் மகர ராசியில் நுழையும் நாள் தமிழ் தை மாதப் பிறப்பாகும். இந்நாளே தமிழரின் சிறப்புதினமான தைப் பொங்கல் திருநாளாக உள்ளது. தைப் பொங்கல் தமிழரின் அறுவடைத் திருவிழாவாகவும் குடும்பங்களுடன் சேர்ந்து, தங்கள் கால்நடைகள், கருவிகள் மற்றும் நிலங்களை வணங்கி, நல்ல அறுவடைக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் அடுத்த ஆண்டில் நல்ல விளைச்சல் வேண்டியும் சூரியனை வணங்கும் முக்கிய திருநாளாகவும் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்ற சிறப்பான தினமாகும்.

இதேபோல கடகராசியில் சூரியன் பிரவேசிக்கும் நாள் தித்திக்கும் கூழ்காச்சி மகிழும் ஆடிப்பிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. "ஆடி விதை தேடி விதை" என்று கூறுமளவிற்கு ஆடி மாதம் விதைப்பு தொடங்கும் மாதமாகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இவ்வாறு கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, ஆகிய இராசிகளில் சூரியன் நுழைந்து சஞ்சரிக்கும் காலம் முறையே மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களாகக் கொள்ளப்படுகின்றன.

சூரியனின் வட, தென் திசைநோக்கிய நகர்வு

சூரியனின் தெற்கு நோக்கிய மற்றும் வடக்கு நோக்கிய நகர்வுத் தோற்றம் அயன நகர்வு எனப்படும். சூரியன் வடக்கு நோக்கி நகருவதாக தோற்றும் ஆறு மாத காலத்தை வடசெலவு (உத்தராயனம்) எனவும் பின்பு தெற்கு நோக்கி நகருவதாக தோற்றும் ஆறு மாத காலத்தை தென்செலவு (தட்சணாயனம்) எனவும் சொல்லப்படுகின்றது.

சூரியனின் இராசி வழி நகர்வுத் தோற்றமும் மற்றும் வடக்கு மற்றும் தெற்கு நோக்கிய அயன நகர்வுத் தோற்றமும் எவ்வாறு தோற்றுகிறது என அறிவது யாவருக்கும்



பயனுள்ளதாக அமையும். இதற்கு வான்பொருட்களின் இயக்கங்கள் பற்றிய துல்லியமான அவதானிப்புக்கள் இன்றியமையாததாக உள்ளன.

பொதுவாக சூரியன் கிழக்கில் உதிப்பதாகவே சொல் கின்றோம். ஆனால் உண்மையில் சூரியன் உதிக்கும் தானம் பூவியிலிருந்து நோக்குவோருக்கு ஒரே நிலை யான புள்ளியில் வருடம் முழுக்க தோற்றுவதில்லை. நிலை மாற்றம் அடைகிறது.

சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும்தான் உண்மை வடக்கிலிருந்து **90** பாகையில் உள்ள சரியான கிழக்கே தோற்றும். அதன்பின் தினந்தோறும் வட திசை நோக்கி **23.5**பாகை வரை நகர்ந்து கடக ரேகையை அடைந்த பின்னர் பின்னர் மீண்டும் தென் திசை நோக்கி நகரத் தொடங்கும். இதன் போது மீண்டும் ஒரு முறை சரியான கிழக்கை அடைந்து தொடர் ந்து, தென் திசை நோக்கி **23.5** பாகை வரை நகர்ந்து மகர ரேகையை அடைந்த பின்னர் மீண் டும் வடதிசை நோக்கி நகர்வதான தோற்றத்தை அளிக்கும். இவ் வாறு வட, தென் திசை நோக்கிய நகர்வு தோற்றத்தைத் தொடங்கும் நாட்கள் அயன நாட்கள் எனப்படும். **(படம் 1)**

இவ்வாறு உத்தராயன கால ஆறு மாதங்களும் தட் சணாயன கால ஆறு மாதங்களும் சேர்ந்த காலம் ஓர் ஆண்டாகக் காணப்படுகிறது. இது சாயன வருடமாகவும் கருதப்படுகிறது. சாயன வருடம் என்பது வான மண்டல நடு ரேகையும் (விஷு ரேகை)சூரிய வீதியும் வெட்டும் புள்ளியிலிருந்து (வசந்த புண்ணிய காலம்) தொடங்கி மீண்டும் வான மண்டல நடு ரேகையும் சூரிய வீதியும் வெட்டும் புள்ளி வரையான காலமாகும்.

அறிவியல் வேறுபாடுகள்

தற்கால அறிவியலின்படி பூமியல் உள்ளோருக்கு சூரியன் சரியான கிழக்கில் (உண்மை வடக்கிலிருந்து **90**பாகை) தோற்றும் நாள் என்பது வான மண்டல நடு ரேகையும் சூரிய வீதியும் வெட்டும் புள்ளியில் அமை யும் நாளாகும். சூரியன் பூமத்திய ரேகைக்கு மேலே அதாவது சூரியன் வான் உச்சிக்கு வரும் நாளாகவும் காணப்படுகிறது. இது பெரும்பாலும் பங்குனி **22**, புரட்டாதி **23** ஆகியன இந்தத் தினங்களாகின்றன. இக்காலங்கள் சம பகல் இரவு நாள்களாகவும் அமை யும். இது விசுவம் (விஷுவம்) என அழைக்கப்படும்.

மேலைநாட்டு இராசி அமைப்பு முறை இந்த புள் ளிகளைத் தொடக்கமாகக்கொண்டு அசையும் இராசி சக்கரத்தை பின்பற்றுகின்றது. பங்குனி மாத இப்புள்ளி சாயன முறையின் மேடராசி தொடக்கமாகக் கொள்ளப் படும்.

புவி அச்சின் துருவங்கள் நோக்கிய முனைகள் நிலை யான புள்ளியை நோக்கியே தொடர்ந்து சுழற்சியை ஏற்படுத் தாது சிறுவட்ட பாதை வழியே யும் அச்சின் முனை நகரும் இது புவி அச்சின் முன்னிகழ்ச் சியும் தள்ளாட்டமும் எனப் படும் **(படம்2)**. இதன் காரண மாக சம இரவு பகல் நாள் புள்ளி காலத்தோடு மேட ராசியின் தொடக்கப் புள்ளியிலிருந்து சூரியனின் நகர்வுக்கு எதிர்த் திசையில் நகர்வடையும். (அயன சலனம்). ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுக ளுக்கு முன் அண்ணளவாக கி.பி. **245** அளவில் இவ் விரண்டு புள்ளிகளும் ஒன்றாக இருந்துள்ளன. பின்னர் ஆண்டுக்கு ஏறத்தாள **50.3** விகலை அளவில் விலகி செல்வதாகக் கணிப்பி டப்படுகிறது. இதனால் சாயன முறையில் மாற்றமடையும் தீர்க்க ரேகை (கிராந்தி விருத்தம்) கைக் கொள்ளப்படு கிறது.

இம்மாற்றம் நிரயன முறையில் அயனாம்சம் எனச் சொல்லப்படுகின்றது. (நிரயன தீர்க்க ரேகை கோணம்



ஸ்ரீ சாயன தீர்க்க ரேகை கோணம் - அயனாம்சம்) இன்று இப்புள்ளி நிரயன முறைப்படியான இராசிச் சக்க ரத்தில் உத்தரட்டாதி முதலாம் பாதத்தில் தற்போது அமைந் துள்ளதாக நிரயன முறையை பின்பற்றுவோர் கணித் துள்ளனர். இது சாயன முறையை பின்பற்றுவோருக்கு அவர்கள் வரையறுக்கும் மேட ராசியின் தொடக்கமாக **(0**பாகை மேடம்) அமையும். இதனால் சாயன முறையை பின்பற்றுவோருக்கு அவர்களின் அசையும் இராசி மண் டலத்தின் தொடக்கமும் சம பகல் இரவு நாளும் ஒன் றாக அமைகிறது.

நிரயன முறையை பின்பற்றுவோருக்கு நிலையான இராசி மண்டலத்தின் தொடக்கமும் சம பகல் இரவு நாளும் (வசந்த புண்ணிய காலம்) ஒன்றாக அமையாது. வேத காலத்திலிருந்து பினபற்றப்பட்டுவந்த இராசி மண்டலத்தின் தொடக்கமும் சம பகல் இரவு நாள், விசுவம் (விஷுவம்) தொடக்கமும் ஒன்றாக கொள்ளும் அயன முறை வழக்கத்தை மாற்றி நிரயன முறையை கைக்கொள்ள (படம் **3**) வகையை செய்தவர் இந்திய



வானியல் ஆராச்சியளார்களால் போற்றப்படும் வராகமி கிரர் ஆவார்.

தமிழ்ப் பஞ்சாங்கங்கள்

தமிழ்ப் பஞ்சாங்கங்கள் நிரயன வருடத்தை அடிப்படையாகக் கொண்டவை. அதாவது நட்சத்திர மண்டலத்தில் உள்ள ஒரு நிலையான புள்ளியில் தொடங்கும் (அச்சுவினி நட்சத்திரத்தை தொடக்கப் புள்ளியாகக் கொண்டு) சூரியனின் சுற்று மீண்டும் 360 பாகைக் கூடாக சுற்றி அதே புள்ளியை அடைய எடுக்கும் காலம் எனக் கொள்ளப்படுகிறது. இங்கு இராசிகளில் அமைந்துள்ள நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்பின் அடிப்படையில் இடப்பட்ட பெயர்கள் அடிப்படையில் நிலையான இராசி மண்டலம் கருதப்படுகிறது. (படம் 4) இது சாயன வருடத்தைவிட 20 நிமிடங்கள் அளவில் கூடியதாக இருக்கும். ஆனால் தமிழ்ப் பஞ்சாங்கங்களின் வழக்கில் தை மாதப்பிறப்பன்றே உத்தராயன தொடக்கமும் (தை01, ஜனவரி 14/15) ஆடி மாதப் பிறப்பன்றே தட்சணாயன தொடக்கமும் (ஆடி01, ஜூலை14/15) குறிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன. இது உண்மையான உத்தராயன தொடக்கமான மார்கழி 20/21, தட்சணாயனத் தொடக்கமான ஆனி 20/21 ஆகிய தினங்களிலிருந்து அண்ணளவாக 23 நாட்கள் பின்தங்கிய தினங்களாக உள்ளன.

தற்காலத்தில் வானியல் கணிப்புக ளின்படி தை மாதப் பிறப்பும் உத்தராயனமும் ஆடிப் பிறப்பும் தட்சணாயனமும் ஒரே தினத் தில் பொருந்துவதாக இல்லை என்பது வெளிப்படை. இதற்கமையவே பருவ காலங்களும் கணிக்கப்படுகின்றன.

சாயனவருடமோ நிரயன வருடமோ புவியில் இருந்து நோக்குபவர்களுக்கு அதாவது அவதானிகளுக்கு சூரிய னின் வடக்கு நோக்கிய நகர்வின் (உத்தராயனம்) தொடக்கமும் தெற்கு நோக்கிய நகர்வின் (தட்சணாயனம்) தொடக்கமும் தெளிவாக கண்டுகொள் ளக்கூடியவை. எனவே இதில் தவறு ஏற்படுதல் ஆகாது. இதன் அடிப்படை யில் தமிழ்ப் பஞ்சாங்களின் அயன நிர்ணயம் தவறாகின்றது. எனவே இந்துக்களின் முக்கிய தினங்கள் நிர யன முறையிலும் பருவகாலங்கள் சாயன முறையிலும் கைக்கொள்ளு தலே பொருத்தமாகும்.

எனவே தமிழ் தை மாதப் பிறப் புக்கு முன்னர் 23 நாட்கள் முன்னதாக தமிழ் மாசம் மார்கழி 7/8 இல் உத்தரா யன காலமும் ஆடிப்பிறப்புக்கு முன் னர் 23 நாட்கள் முன்னதாக தமிழ் மாசம் ஆனி 7/8 இல் தட்சணாயன காலமும் தொடங்கியிருக்குகும் என்பதே சரியான நிலைப்பாடாகும்.



(கட்டுரையாளர் அளவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்)

வதந்தி

விறுவிறுப்பு நிறைந்த வெப் தொடர்!

ஒரு சிறுமியின் கொலையும் கொலையாளியைக் கண்டறியும் விசாரணையுமான ஒரு விறுவிறுப்புக் குற்றத் தொடர்தான் 'வதந்தி' என்கிற இணையத் தொடர். ஆனாலும் சிறுமியின் கொலையைச் சுற்றிச் சுழலும் சமூகத்தின் கதைகள் மீதான கேள்வியை காத்திரமாக எழுப்பி நிற்கின்றது படம். சிறுமி என்றிலை, கொலை செய்யப்படும் அல்லது பாதிக்கப்படும் எல்லாப் பெண்கள் தொடர்பிலும் சமூகத்தின் கதையாடல்களை பிறந்த மேனியாய் கேள்வி எழுப்பி நிற்கின்றது திரைக் கதை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெலோனி என்கிற சிறுமி மர்மமான முறையில் கொல்லப்படுகிறார். அவரைக் கொன்றது யார் என்ற விசாரணையில் காவல்துறை இறங்குகிறது. காவல்துறை கொலைக்கான கோணங்கள் என்று நினைக்கும் வழியில் எல்லாம் திரைக் கதை விசாரணைக்காக அலைந்து திரிகிறது. ஒவ்வொரு இடத்திலும் அந்த விசாரணைக் கோணம் சரியானது அல்ல என்று திரும்பி வந்து- திரும்பி வந்து கடைசியில் எதிர்பாராமல் சிக்கிக்கொள்கிறான் குற்றவாளி.

அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ள இந்தத் தொடரை ஆண்ட்ரூ லூயிஸ் எழுதி இயக்கியிருக்கிறார். இவர் 'லீலை', 'கொலைகாரன்' உள்ளிட்ட படங்களை இயக்கியவர். புஷ்கர் - காயத்ரி இந்தத் தொடரை தயாரித்துள்ளனர்.

மொத்தம் 8 எபிசோடு கொண்ட இந்தத் தொடரின் தொடக்கத்தில் மர்மங்கள் கூடிக் கொண்டே போக, அதே அளவிலான ஆர்வமும் அதிகரிக்கத் தொடங்குகிறது. கன்னியாகுமரியின் வட்டார வழக்கை பிரதியெடுத்து, மண்மனம் மாறாமல் இயக்குநர் ஓர் உலகை கட்டமைத்து, அதற்குள் ஒரு குற்றத்தை நிகழ்த்தி பார்வையாளர்களை பிரவேசிப்பதற்கான இடத்தை ஏற்படுத்திக்கொடுக்கிறார். வழக்கமான தமிழ் சினிமாவில் இருந்து விலகி நிற்கும் இந்த வட்டாரா மொழி வழக்கு பார்வையாளர்களுக்கு ஒரு புதிய அனுபவம்.

கேரளாவை ஒட்டிய மண் வாசத்துடன் மலையாளம் கலந்த மொழிவாசமும் கூட' ஓர்மையில்ல சார்', 'பேடிக்கில்லா' போன்ற வார்த்தைகள் அசலை வார்க்கின்றன. முடிந்த அளவுக்கு களத்தை மொழி வழியில் யதார்த்தப்படுத்தி ஊருக்குள் பயணிக்கும் அனுபவத்தை கொடுக்க இயக்குநர் முயன்றிருக்கிறார். அதில் அவருக்குக் கணிசமான வெற்றியும் கிடைத்திருக்கிறது.

அந்த ஊரின் சாயலுக்கு உயிர் கொடுக்கிறது காவல் துறை உதவி ஆய்வாளராக நடித்திருக்கும் எஸ்.ஜே.சூர்யாவின் நடிப்பு. 'மாநாடு' படத்தில் போலீஸ் கதாபாத்திரத்திற்கும், இதற்கும் மலையளவு வித்தியாசம். குறிப்பாக 5-ஆவது எபிசோட்டில் சிங்கிள் ஷாட்டில் அவர் பேசும் வசனம், தொடர் இறுதியை எட்டும்போது தனக்கேயுண்டான உடல்மொழியில் மிரட்டுவது, சென்டிமென்ட் காட்சிகளில் மெச்சூரிட்டி என மிகை நடிப்பின்றி கதாபாத்திரத்திரமாகக் கச்சிதம் காட்டியிருக்கிறார்.

வெலோனி கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் சஞ்சனா தேர்ந்த சீனியர் நடிகையான லைலாவுடன் போட்டிப் போட்டு நடித்திருக்கிறார். அறிமுக நாயகி என்ற தடம் தெரியாதபடி நடிப்பில் தேர்ச்சி பெறுகிறார். இதுவரை பார்த்திராத கதாபாத்திரத்தில் லைலா அழுத்தம் சேர்க்கிறார். தவிர, விவேக் பிரசன்னா, நாசர், ஹரீஷ் பேரடி, ஸ்ம்ருதி வெங்கட் உள்ளிட்டோரின் நடிப்பும் வட்டார மொழியும் கதைக்கு பலம்.

'உண்மை நடக்கும் பொய் பறக்கும்', 'ரொம்ப நல்லவனும், ரொம்ப கெட்டவனும் ஒரே மாதிரி பேசுவாங்க; அவங்கள கண்டுபிடிக்கவே முடியாது' வசனங்கள் ஈர்ப்பு. தொடரின் இறுதியில் பேசும் அறம் சார்ந்த வசனங்கள் வெறும் க்ரைம் - த்ரில்லருடன் முடிவதை தவிர்த்து பிரசாரமில்லாத மெசேஜையும் புகுத்துகின்றன. வெலோனி கதாபாத்திரத்தின் ஆழமான எழுத்தும், குற்றத்தின் பின்னணியை அடுக்கிய விதமும் மொத்த தொடரின் விறுவிறுப்பை கூட்டி அடுத்தடுத்த எபிசோடுகளுக்கு நகர்த்துகிறது. எங்கேஜிங்கான திரைக்கதையில் சில எபிசோடுகள் பொறுமையாக நகர்வது சோதிக்கவே செய்கிறது.

இதையெல்லாம் தாண்டி தொடர் பேச முனையும் கருத்து அழுத்தமானது. எந்தவித ஆதாரமும் இல்லாமல் எளிதாக ஒரு பெண்ணை குற்றப்படுத்திவிட முடியும் என்பதையும், தனது டிஆர்பி, பரபரப்பு பசிக்காக வதந்திகளை உண்டு செறிக்கும் ஊடகங்களின் கோர முகத்தையும், குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமை, வழக்கை முடித்து கொடுக்க காவல் துறை மீதான அழுத்தம், சம்பந்தப்பட்டவரை பாதிக்கும் வதந்திகள் என பல்வேறு விஷயங்களை தொடர் பேசுகிறது.

இடையிடையே வரும் திருப்பங்களும் ரசிக்க வைக்கின்றன. ஒரு தனிப்பட்ட பெண்ணின் வாழ்க்கையை கேலிக்கூத்தாக்கி, பொய் பரப்பி இன்பம் காணும் சமூகத்தை சாடும் தொடரின் இறுதிக்காட்சி அழுத்தம் கூட்டியுள்ளது.

தொடரின் நீளம், பழங்குடியின மக்களை குற்றவாளிகளாக சித்தரிக்கும் போக்கு, சுவாரஸ்யத்திற்காக கூட்டப்பட்ட தேவையில்லாத காட்சிகள் திரைக்கதை ஓட்டத்திற்குக் கொஞ்சம் நெருடல். அதேபோல வெலோனிக்கு பதிலாக மற்றொரு பெண் பாதிக்கப்படும்போது அதை காவல் துறை கண்மூடி கடப்பதன் நியாயமும் புரியவில்லை. தர்க்க நியாயத்திற்காகக்கூட அந்தப் பெண் பற்றி தொடர் பேசத் தவறுவதும் கவனிக்கத் தவறுவதும் இயக்குநர் எடுத்துக்கொண்ட ஒட்டுமொத்தக் கதையின் அழுத்தத்தையும் கேள்விக்குள்ளாக்கிவிடுவதையும் தவிர்க்க முடியவில்லை.

தவிர, கன்னியாகுமரியின் நிலமும், வனமும் சரவணன் ராமசாமியின் ஒளிப்பதிவில் எழில் கூடியிருக்கின்றன. சைமன் கிங் பின்னணி இசை த்ரில்லருக்கான உலகத்தைக் கட்டமைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது.

மொத்தத்தில் வார இறுதி நாட்களில் பொறுமையுடன் பார்க்க தமிழின் மற்றொரு சுவாஸ்ரய வெப் சீரிஸ் 'வதந்தி'

கோல்டு

எதிர்பார்ப்பை வேறுபக்கம் இயக்குநர்

கோல்டு மலையாளப் படம். தமிழ் மொழியாக்கத்திலும் வந்துள்ளது. எதிர்பார்த்த ஒன்று எதிர்பாராத விதமாகக் கிடைத்து அதன் வழி ஏற்படும் விளைவுகள்தான் படத்தின் திரைக் கதை.

ஜோஷி (பிரித்விராஜ்) புதிய கார் ஒன்றை ஆர்டர் செய்து அதன் வருகைக்காக காத்திருக்கிறார். ஆனால், அந்த கார் டெலிவரிக்கு முன்னரே யாரோ ஒருவர் அவர் வீட்டு வாசலில் பொலேரோ வாகனத்தை நிறுத்தி விட்டுச் சென்றுவிடுகின்றனர். என்ன செய்வதென்றே தெரியாமல் திகைக்கும் அவர், காவல் நிலையத்திற்கு சென்று முறையிடுகிறார். இதனிடையே, அந்த பொலேரோவுக்குள் ப்ளூடூத் ஸ்பீக்கர்கள் இருப்பதை கண்டறியும் ஜோஷி, அதிலிருக்கும் ஸ்பீக்கர் ஒன்றை எடுத்து பயன்படுத்துகிறார். அப்போது எதிர்பாராத சம்பவம் நிகழ, ஜோஷி அதை எப்படிக் கையாள்கிறார்? அந்த வண்டியை அங்கே நிறுத்தியது யார்? - இப்படிப் பல கேள்விகளுக்கு அல்போன்ஸ் புத்திரன் தன் ஸ்டைலில் பதில் சொன்னால் அதுதான் 'கோல்டு'.

'பிரேமம்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 7 ஆண்டுகளுக்குப் பிறகு அல்போன்ஸ் புத்திரன் இயக்கத்தில் மலையாளம் - தமிழ் இருமொழிகளில் வெளியாகியுள்ள படம் 'கோல்டு'. தனக்கென ஒரு தனித்துவ பாணியை தன் படங்களில் பிரதிபலிக்கும் அவர், இந்தப் படத்தில் அதை செயல்படுத்த தவறவில்லை. வழக்கமான திரைமொழியிலிருந்து விலகும் படம் வித்தியாசமான படத்தொகுப்பின் மூலம் ஈர்க்கிறது. ஒரு காட்சிக்கும் மற்றொரு காட்சிக்குமான காட்சி மாற்றத்தை தனக்கேயுண்டான 'கட்ஸ்' மூலம் கவனிக்க வைக்கிறார்.

மரக்கிளையில் சத்தமின்றி ஊடுருவும் புழுவைப் போல திரைக்கதையில் திணிப்பின்றி இழையோடும் ப்ளாக் காமெடி நகைச்சுவை ரசிக்க வைக்கிறது. நகைச்சுவைக் காட்சிகளில் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் கலைஞனாக கச்சிதமாக பொருந்துகிறார் பிரித்விராஜ். பதற்றம், பயத்துடன் கூடிய உடல் மொழியை சுமந்து, இடையிடையே நகைச்சுவை, ஒரு சில ஆக்ஷன் சீக்வன்ஸ் என அவரின் தேர்ந்த நடிப்பில் காட்சிகள் உயிர்பெறுகின்றன. சுமங்கலி



உன்னி கிருஷ்ணனாக நடித்திருக்கும் நயன்தாரா பெரிய அளவில் முக்கியத்துவமில்லாத கதாபாத்திரத்தில் சிறப்புத் தோற்றத்தில் வந்து செல்கிறார்.

பிரித்விராஜின் உண்மையான அம்மாவாக நடித்திருக்கும் மல்லிகா சுகுமாறனின் கதாபாத்திர பொருத்தம் கச்சிதம். எப்போதும் தேநீர் கோப்பையுடனும், சமையலறையே கதியாக இருக்கும் கிடக்கும் அவரது கதாபாத்திரம் இந்திய அம்மாக்களின் பிரதிபலிப்பு. அஜ்மல், கிருஷ்ண ஷங்கர், சபரீஷ் வர்மா, வினய் போர்ட், செம்பன் வினோத், ரோஷன் மேத்யூ, லாலு அலேக்ஸ், ஜாஃபர் இடுக்கி என படப்பிடிப்பை பார்க்க வந்த அனைவருக்கும் ஒரு கதாபாத்திரத்தை கொடுத்து நடிக்க வைத்திருப்பது போல மலையாள நடிகர் உலகமே படத்தில் தஞ்சம் புகுந்துள்ளது.

ராஜேஷ் முருகேஷன் பின்னணி இசையை தனது படத்தொகுப்புக்கு ஏற்றார்போல காட்சிகளுக்கிடையே தூவி மெருக்கேற்றியிருக்கிறார் அல்போன்ஸ். எறும்பைக்கூட பின்தொடர்ந்து கேமராவுக்குள் நுழைத்திருப்பது, சூரியனுக்கு வழிவிட்டு நகரும் மேகங்களையும், கேரள மண்ணின் சாயலையும் அதன் உயிர்ப்பு மாறாமல் பதியவைத்திருக்கும் ஆனந்த் சி.சந்திரன், விஸ்வஜித் ஒளிப்பதிவு படத்தின் தரத்தை மேன்மேலும் கூட்டுயிருக்கிறது.

இப்படியாக ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, விஎஃப்எக்ஸ், பின்னணி இசை என எல்லாவற்றையும் 7 ஆண்டுகளாக செதுக்கிய இயக்குநர் இறுதியில் கதையில் கவனம் செலுத்தவில்லை என்ற உணர்வை மொத்த படமும் உறுதிசெய்கிறது.

பொதுவாக மலையாள படங்கள் பயணச்சீட்டுக்கு பின்புறம் எழுதும் அளவிலான கதையை வைத்துக் கொண்டு, அதை திரைக்கதையில் மிரட்டி அழுத்தும் கூட்டுவது வழக்கம். அப்படி தொடங்கும் இப்படத்தின் திரைக்கதையும் ஓரிடத்தில் அழுத்ததை கூட்டும் என எதிர்பார்த்தபோது, 'தேமே' வென வெறும் நகைச்சுவைகளால் நகர்வது ஒரு கட்டத்திற்கு மேல் அயற்சி. பார்வையாளர் களை கதைக்குள் இழுப்பதற்கான அழுகை, கோபம், விறுவிறுப்பு, பதற்றம், பயம் என்ற எந்த உணர்ச்சியும் திரைக்கதையில் இல்லாதது அதன் தொடர் ஓட்டத்தை பாதிக்கிறது.

மையக் கதை எனும் அச்சாணி பல வீனமாக காட்சியளிப்பதால் அதன் திரைக் கதை எனும் சக்கரம் பாதை தெரியாமல் தடுமாறியிருக்கிறது. அத்துடன் படத்தின் நீளமும் இணைய இறுதியில் கேமரா, எடிட்டிங்காலும் ஈடுக்கட்ட முடியவில்லை. படம் முடிந்த பின்பும் நிறைய கேள்விகளும் முழுமையற்ற உணர்வும் துரத்திக் கொண்டேயிருக்கின்றன. அதேபோல அடர்த்தியில்லாத கதையில் தேவைக்கதிகமான கதாபாத்திரங்கள் திகட்டல்.

மொத்தத்தில் எந்தவித கதையையும், அதையொட்டி நீளும் உணர்ச்சித் தாக்கங்களையும் எதிர்பார்க்காமல், தொழில்நுட்ப ரீதியான ரசனையை மட்டும் நம்பி செல்பவர்களுக்கு இந்த 'கோல்டு' 24 கேரட் தான். அழுத்தமான, அடர்த்தியான கதையையும், திரைக்கதையையும் எதிர்பார்த்துச் சென்றால் கோல்டு ஜொலிக்க வாய்ப்பு குறைவு.



உதயகுமார்

அன்புதான் தமிழன் வழி

தேசிய இனக் குழுக்களுக்கு மொழியும், நிலமும், பண்பாடும், வரலாறும் மட்டுமல்ல, சில சிறப்புப் பண்புகளும், அவர்களுக்கே உரித்தான சிறப்புப் பங்களிப்புக்களும் இருப்பதுண்டு.

பசிபிக் பெருங்கடலிலுள்ள ஹவாய் தீவுகளில் வாழும் பூர்வகுடி மக்கள் "அலோஹா' என்றொரு கருத்துருவை முன்னிறுத்துகின்றனர். "அலோஹா என்பது ஒரு சொல் லல்ல, அஃதோர் உணர்வு. அதன் அர்த்தத்தை அகரா தியில் காண இயலாது. மனித உள்ளங்களில் முகிழ்த்திடும் இயல்பு அது" என்று விவரிக்கிறார்கள் அவர்கள்.

ஹவாய் பூர்வகுடிகளின் உரிமைகளுக்காக, விடு தலைக்காகப் போராடிய ஹவ்னானி கே டிராஸ்க், தன்னு டைய நூல் ஒன்றில் "ஹவாய் பூர்வகுடியினருக்கு இடை யேயான சமூகத் தொடர்புகள் அலோஹா வழியே நடக் கின்றன. அது அன்பு என்று மேலோட்டமாக மொழி பெயர்க்கப்பட்டாலும், அத்துடன் குடும்பம், பாரம்பரியம் எனும் ஓர் ஆழமான ஹவாய் அம்சமும் இரண்டறக் கலந்திருக்கிறது.

"ஹவாய் மக்கள் தங்கள் உறவுகளோடே பெரிதும் சார்ந்திருப்பதால், அவர்கள் மீதும், அத்தனை பேரையும் ஒன்றாக இணைக்கும் தங்கள் நிலத்தின் மீதும் அலோஹாவை உணர்கின்றனர். ஒருவரின் குடும்பத்தைச் சாராத ஒருவர் மீதோ, ஒன்றின் மீதோ அலோஹாவை உணரவும் முடியாது, கடைப்பிடிக்கவும் முடியாது. சிறப்பு அர்த்தம் கொண்ட "அலோஹா'தான் ஹவாய் பூர்வ குடிகள் பேசும் மொழியின் மூலாதாரமாகவும் விளங்குகி றது" என்று தெரிவித்திருந்தார்.

ஹவாய் மக்களின் அலோஹாவும், தமிழர்கள் நம் முடைய அன்பும் ஏறத்தாழ ஒன்றானவை. அலோஹா போலவே அன்பும் ஒரு வாழ்வியல் கோட்பாடு. நாமக் கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நறுக்கென்று சொல் கிறார்:

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்.

ஆம், அன்பு தமிழின், தமிழர்களின் கருத்தியல், தத் துவம், சிறப்புப் பங்களிப்பு.

அன்புடைமை பற்றி ஓர் அதிகாரமே பாடியிருக்கும் திருவள்ளுவர், "அன்பின் வழியது உயிர்நிலை" என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறார். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்" என்று வினவும் வள்ளுவர்,

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு - என்கிறார்.

உலகத்தில் இன்பமுற்று வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு என்பது அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்கையின் பயனே என்கிறார்.

அன்பு, கொடை, மானம், வீரம் போன்ற அம்சங்கள் பொருந்தியதே தமிழரின் வாழ்வு. ஆனால் அனைத்திற் கும் அன்பே அடிப்படை. கொடைக்கு ஆதாரம் அன் புதான். சிலர் வீரத்தை வன்முறை தோய்ந்ததாக விவரித் தாலும், உண்மையில் அறத்தின்பாலும், தம் மக்களின் பாலும் எழும் அன்பினால் உருவாவதுதான் அந்த வீரம்.

அன்பிலிருந்து முகிழ்ப்பதுவே வீரம் என்று வள்ளு வரும் தெளிவுபடுத்துகிறார்.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

அதாவது அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுகிறவர்கள் அறியாதவர்கள். வீரத்துக்கும் அதுவே துணையாக நிற்கிறது என்கிறார். "அன்பளித்து விட்டாய் - காளி! ஆண்மை தந்து விட்டாய்' என்று பாடும்

பாரதியும் இவ்விரண்டையும் இணைத்தே பார்க்கிறார்.

அன்பு, இரக்கம், கொல்லாமை போன்ற கொள்கைகளைக் கொண்ட, இறையருள் தவம்புரிந்த, அற்புதங்கள் நிகழ்த்திய சித்தர்களும் அன்பை அமோகமாகப் பாடியிருக்கிறார்கள்.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே என்று பாடுகிறார் திருமூலர்.

அன்பு வேறு சிவம் வேறு என்பார் அறியாமை மிக்கவர்கள். இவையிரண்டும் ஒன்றே என்று உணரும்போது இறைமைப்பேறு வாய்க்கும் என்கிறார் அவர்.

தாயை அன்பின் அளவுகோலாகப் பார்க்கும் இடைக்காட்டுச் சித்தர், இம்மையையும் மறுமையையும் அன்பால் இணைக்கிறார்:

தாயினும் அன்பனன்றோ பசுவே
சத்திக்குள் ளானவன்தான்
நேயம் உடையவர்பால் பசுவே
நீங்கா திருப்பானே. **(41)**
ஐயன் திருப்பாதம் பசுவே
அன்புற்றுநீ பணிந்தால்
வெய்ய வினைகளெல்லாம் பசுவே
விட்டொடுங் கண்டாயே. **(43)**

பாம்பாட்டிச் சித்தரோ அகத்தில் எள்ளளவும் அன்பு இல்லாதவர்கள் முக்தி எய்த முடியாது என்று முடிக்கிறார்:

எள்ளளவும் அன்பகத்தில் இல்லா தார்முத்தி
எய்துவது தொல்லுலகில் இல்லை யெனவே
கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலனைக்
கண்டு தொழுதேகளித் தாடாய் பாம்பே. **(89)**

குதம்பைச் சித்தர் இன்னும் ஒரு படி மேலே போய், இறைவன் மீது அன்போடு கலந்த பக்தி இல்லாதவர்களுக்கு நரகமும், துன்பமுமே வாய்க்கும் என்கிறார்:

அன்போடு நற்பத்தி ஆதிமேல் வையார்க்குத்
துன்பாம் நரகமடி குதம்பாய்
துன்பாம் நரகமடி? **(92)**

இப்படியாக பொருளும், அருளும் நிறைய இருந்தாலும், அன்பு இல்லாதவர்களுக்கு இவ்வுலகும் இல்லை, அவ்வுலகும் இல்லை என்று கொள்கிறவர்கள் நாம்.

அன்பு என்பது மோகம், தாபம், தாகம், மயக்கம், தாக்கம் எனும் கடைநிலையிலிருந்து, காதல், காமம், கலவி என்று இடைநிலைக்கு வளர்ந்து, நேசம், பாசம், நட்பு எனச் சிறந்து, தொண்டு, சேவை, வீரம், ஈகம் என்று உயர் நிலை அடைகிறது.

ஆம், அன்பு வெறும் உணர்வு மட்டுமல்ல, அது தமிழர் வாழ்க்கை முறை. "யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதன் அடிப்படை அன்பு. "தந்தை மகற்காற்றும் நன்றி', "மகன் தந்தைக்காற்றும் உதவி', "ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும்' போன்றவற்றின் அடித்தளமும் அன்பு தான். முல்லைக்குத் தேர்கொடுத்த பாரியின் பெருங் கருணை, பிள்ளையைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற சோழ மன்னனின் நீதி பரிபாலனம், எதிரி மன்னனிடம் தனியாக தூதுபோன அவ்வையின் வீரம், காலம்தாழ்த்தி அலட்சியமாக தண்ணீர் கொடுத்ததை ஏற்காமல் இறந்து போன கணைக்கால் இரும்பொறையின் மானம் என எல்லாவற்றுக்கும் பின்புலம் அன்புதான்.

மார்கரெட் டிராவிக் எனும் அமெரிக்க அறிஞர் "தமிழ்க் குடும்பத்தின் அன்பு குறித்த குறிப்புகள்' எனும் நூலை **1992**-ஆம் ஆண்டு வெளியிட்டார். மதுரை அருகேயுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் ஒரு தமிழ்க் குடும்பத்தோடு ஒன்றாய் வாழ்ந்து மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் அந்நூலை எழுதியுள்ளார்.

அந்நூலில் அவர், "அக்குடும்பத்தார் ஏதோ ஒரு வகையில் அன்பால் சுற்றிச் சூழப்பட்டிருந்தார்கள். அன்பு தான் ஆகச்சிறந்தது என்று அறிவித்துக் கொண்டிருந்த ஒரு கலாசாரத்தால் அவர்கள் மனிதர்களாக ஆக்கப்பட்டவர்கள். ஆனால் அன்பு என்பது அவர்களுக்கு எதைச் சுட்டிக்காட்டுகிறது என்று எப்படி கண்டுபிடிப்பது? அன்பு அவர்கள் மனங்களில் இருந்தது. அதை நம்பத் தகுந்த வழியில் எப்படி எழுத்தில் வடிப்பது?" என்கிறார்.

மார்கரெட் மேலும் தொடர்ந்து "தமிழ்நாட்டில் 'நான் ஓர் அன்பான மனிதன்' என்று யாரும் வெளிப்படையாக சொல்லிக் கொள்வதில்லை. காரணம் அன்பானவர் அடக்கமானவராகவும் இருப்பது அவசியம். அன்பை ஒருவரால் தம் செயல்களில்தான் காட்ட முடியும். அன்றாட வாழ்வில் அன்பு பற்றி தமிழ் மக்கள் பேசிக் கொண்டிருப்பதில்லை.

இரவு உணவுக்கு என்ன சமைக்கிறோம், குழந்தைகளில் ஒருவர் அன்றைய நாளில் என்ன செய்தார், இப்போதே நிலத்தை உழ வேண்டுமா என்பது போன்றுதான் பேசிக் கொள்கிறார்கள். எப்போதாவது அன்பு பற்றி மறைமுகமாக ஏதாவது பேசிக் கொள்கிறார்கள்.

அதேபோல, அன்பான வார்த்தைகளையோ, அன்பு குறித்த வார்த்தைகளையோ எப்போதாவதுதான் பேசுகிறார்கள். ஆனால் உண்பது போன்ற கலாசார நிகழ்வுகளில் பொதிந்திருப்பதுபோல, அன்பான செயல்கள் பரவலாகக் காணப்படுகின்றன" என்று எழுதுகிறார்.

கடல்சார் மக்களாயிருந்து, கப்பல் கட்டுதல், கடல் வழி வாணிபம் செய்தல், தூரதேசப் பயணம் புரிதல் என்றெல்லாம் வாழ்ந்த நம்மில் பலருக்கு இன்று நீச்சல டிக்கக்கூடத் தெரியாதிருப்பது போல, அன்புவழி மக்களாகிய நாம், நம்மிடையேக்கூட அன்பு செலுத்தும் வழி வகை அறியாது திசைமாறிச் சென்று கொண்டிருக்கிறோம். நம்மை வெறுப்பு, கோபம், வன்மம், வன்முறை என்று எதிர்வழியில் இட்டுச்செல்ல ஏராளமானோர் முயல்கின்றனர்.

அநீதிக்கு எதிராகவும், அடக்குமுறைக்கு எதிராகவும்

போராடும்போது, கோபம் கொள்வது, கொந்தளிப்பது இயல்புதான். அது களத்தில் தேவையானதும்கூட. ஆனால் வன்முறையைத் தூண்டுவது, தான் பாதுகாப்பாக இருந்து கொண்டு பிறரை ஆபத்துக்குள் தள்ளிவிடுவது, வாய்ச் சொல் வீரம் பேசி உடன்வருவோரை வழிமாற்றி விடுவ தெல்லாம் வெறுமனே வெப்பம் கக்குகிற அழிவுக் கோபம். சிந்திக்கத்தூண்டும், செம்மையாகச் செயல்பட வைக்கும், அடிவயிற்றுத் தீயை அணையாது காக்கும் கோபம்தான் வெளிச்சம் உமிழும் அறிவுக் கோபம்.

பெரும் சமூகப் போராளிகள், விடுதலை வீரர்கள், மக்கள் தலைவர்கள் எல்லோருமே வெளிச்சம் உமிழும் அறி

நமது எதிர்ப்பரசியலின், கோபத்தின், வசீகரத்தின் ஈரல் குலை நமது கலாசாரமாக இருக்க வேண்டும்.

வுக் கோபத்தைத்தான் கைக்கொண்டிருக்கின்றனர். ஹவ்னானி கே டிராஸ்க் தன்னுடைய 1985ஆம் ஆண்டு பேச்சு ஒன்றில் குறிப்பிட்டதுபோல, கலாசாரம் கொண்டிருக்கும் மக்கள் அரசியல்மயமாக்கப்படவேண்டும். நமது எதிர்ப் பரசியலின், கோபத்தின், வசீகரத்தின் ஈரல் குலை நமது கலாசாரமாக இருக்க வேண்டும். அதற்காகத்தான் இருக் கிறது கலாசாரம். அப்படியானால் மார்கரெட் டிராவிக் விளக்கிச் சொல்வது போல, தமிழ் மக்க ளின் அன்பியல்பின் பின்புலத்தில் அறம் சார்ந்த அரசியல் மட்டுமே நீடித்து நிலைத்து நிற்க முடியும்.

ஆகவேதான் பெருங்கவிஞர் பாரதியார் இப்படிப் பாடுகிறார்:

அன்பென்று கொட்டு முரசே-அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு;
அன்பென்று கொட்டு முரசே!-மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
அன்பென்று கொட்டு முரசே!-அதில்
யார்க்கும் விடுதலை உண்டு

நமது கலாசாரக் கருத்துரு அன்புதான். அன்பு வன்முறையற்றது, உரிமைகள் போற்றுவது, தகராறுகள் தீர்ப்பது, சமாதானம் உருவாக்குவது, வளங்களைக் காப் பது, வாழ்கையை வளர்ப்பது, வருங்காலத்தைத் தகவ மைப்பது. அன்புதான் தமிழினம். அத்துடன் அறம், அழகு, அறிவு கலக்கும்போது, நாம் உய்வடைவதற்கான ஓர் ஒப்பற்ற வழி துலங்கும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781